வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 03.01.2025 வெள்ளிக்கிழமை | இதழ் : 03 | பக்கங்கள் : 12

# அநுர முன்வைக்கும் ஒரு திட்டத்தை முழுமையாக முடிக்க சீனா தயார்!

## ஷி ஜின் பிங்கிடம் இருந்து கிடைத்த செய்தி

கொழும்பு, ஜனவரி 03

**ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தமது சீனப் பயணத்தில் முன் வைக்கும் ஒரு திட்டத்தை முழுமையாக செய்துகொடுக்க சீனா தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி ஷி ஜின் பிங் உறுதியளித்துள்ளார்.**

ஜனாதிபதியின் சீனப் பயணம் தொடர்பிலான திட்டங்களை வகுக்கும் நோக்கில் இலங்கை வந்திருந்த சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் பிரதித் தலைவர் கின் போயோங், சீன ஜனாதிபதியின் இந்த செய்தியை அநுரகுமார திஸநாயக்கவிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 15ஆம் திகதிமுதல் 17ஆம் திகதி வரை இரண்டு நாள் பயணமாக ஜனாதிபதி இந்தியா சென்றிருந்த தருணத்தில் கின் போயோங் இலங்கை வந்திருந்ததுடன், அரசாங்கத்தின் முக்கிய தரப்பினருடன் பேச்சுகளில் ஈடுபட்டிருந்தார்.

கின் தலைமையிலான குழு ஜே.வி.பி தலைமையகத்திற்கும் சென்று கலந்துரையாடல்களின் ஈடுபட்டிருந்தது. இது குறித்து ஊடகங்களுக்கு விசேட அறிவிப்பொன்றை வெளியிட்ட ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் நீண்ட காலமாக நெருங்கிய தொடர்பு

11

## சுகாதாரத் துறைக்கு இம்முறை பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்கீடு!

கொழும்பு, ஜன. 03

சுகாதாரத்துறைக்கு இம்முறை வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகளவு தொகை நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்காக மஹரகம புற்று நோய் வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள இரத்த மற்றும் எலும்பு மாற்றுச்

11

## பாடசாலை உபகரணங்களின் விலை 20 வீதத்தால் குறைப்பு!

கொழும்பு, ஜன. 03

டொலரின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருவதால் அப்பியாசக் கொப்பிகள் உள்ளிட்ட பாடசாலை உபகரணங்களின் விலை 20 வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிறு கைத்தொழில் சங்கம் தெரிவித்துள்ளது.

11

## புளியம்பொக்கணை பாலத்துக்கு கீழ் இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்பு!

### விபத்தில் உயிரிழந்திருக்கலாம் என சந்தேகம்



கிளிநொச்சி, ஜன. 03

கிளிநொச்சி - பரந்தன் - முல்லைத்தீவை இணைக்கும் ஏ- 35 வீதியில், புளியம்பொக்கணை 10ஆம் கட்டை பாலத்துக்கு கீழிருந்து இரு இளைஞர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் பயணித்த மோட்டர் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட இரண்டு சடலங்களையும் சம்பவ இடத்துக்கு சென்ற

11

## நெருக்கடி நிலையில் பொருளாதாரம் இக்கட்டான முடிவுகள் எடுக்க நேரிடும்!



### கூறுகிறார் அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, ஜன. 03

நாட்டின் பொருளாதாரம் இன்னமும் மிகவும் நெருக்கடியான நிலையிலேயே காணப்படுகிறது. இதிலிருந்து மீண்டு வர சில இக்கட்டான முடிவுகளை எடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அமைச்சில் அதிகாரிகளிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வீழ்ந்த இடத்தில் நாட்டை மீட்க அனைவரும் உறுதியுடன் இருக்கவேண்டும்.

11

## அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்!

### மல்லாவியில் கையெழுத்து போராட்டம்

முல்லைத்தீவு, ஜன. 03

நீண்ட காலமாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி முல்லைத்தீவு - மல்லாவி நகரில் நேற்று கையெழுத்து போராட்டம் இடம்பெற்றது.

போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் குறித்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும்,

11

## அரிசிக்கான தட்டுப்பாடு 7ஆம் திகதியுடன் நீங்கும்

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 03

ஜனவரி 7ஆம் திகதியின் பின்னர் அரிசிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு படிப்படியாக நீங்கும். இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசி உரிய நடைமுறைகளின் கீழ் விநியோகிக்கப்பட்டு வருவதாக இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ரவிந்து பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனத்தில் நேற்று வியாழக்கிழமை

11

### கடற்படையினர் மீது தாக்குதல்:

## இந்திய மீனவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரம்

### பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன. 03

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களைக் கைது செய்ய முயன்றபோது, கடற்படையினர் மீது தாக்குதல் நடாத்தி, கடமைகளுக்கு இடையூறு விளைவித்த இந்திய மீனவர்கள் 12 பேருக்கு எதிராகவும் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்யுமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி கிரிசாந்தன் பொன்னுத்துரை, பருத்தித்துறை பொலிஸாருக்கு

11

## வன்னி ஆசிரியர் வெற்றிட பிரச்னைக்கு மூன்று மாதங்களில் தீர்வு வழங்கப்படும்

### வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர்

வவுனியா, ஜன. 03

வன்னியிலுள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டு மென வன்னி மாவட்ட பாராளுமன்ன உறுப்பினர் துரைராசா ரவிகரன் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

இந் நிலையில் மூன்று மாத காலத்தில் வடமாகாண பிரதம செயலாளரின் தலைமையில் இப்பிரச்னைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படுமென வடமாகாண பிரதி பிரதம செயலாளர் திருமதி எ. அன்ரன் யோகநாயகம் பதிலளித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி,

11

## காரைநகர் படகு கட்டுமானத் தளத்தை புனரமைப்பதற்கு இந்திய அரசு உதவி!

கொழும்பு, ஜன. 03

யாழ். மாவட்டத்தில் காரைநகர் படகு கட்டுமானத் தளத்தை புனரமைப்பதற்கு இந்தியா - இலங்கை இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட் டுள்ளது.

காரைநகர் படகு கட்டுமானத் தளத்தை புனரமைப்பதற்கு இந்தியா 290 மில்லியன் ரூபாவை நிதியாக வழங்குகிறது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் இந்தியாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் சேனுக்கா திரேனி செனவிரத்ன ஆகியயோர் டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி கையெழுத்திட்டுள்ளனர்.

வரையறுக்கப்பட்ட சீனோர் நிறுவனத்திற்குரிய காரைநகர் படகு கட்டுமான நிலையத்தின்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்தை மாற்றும் ஐக்கிய மக்கள் சக்தி?

## தொடரும் தோல்விகளை அடுத்து

கொழும்பு, ஜன. 03

ஐக்கிய மக்கள் சக்தியின் தொலைபேசிச் சின்னத்துக்குப் பதில் மாற்றுச் சின்னமொன்றை பயன்படுத்துவது தொடர்பில் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் வலியுறுத்தியுள்ளனர்.

கடந்த 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஐக்கிய மக்கள் சக்தி உருவாக்கப்பட்டது தொடக்கம், இதுவரை போட்டியிட்ட எந்தவொரு தேர்தலிலும் கட்சி குறிப்பிடத் தக்க அளவில் வாக்குகளைப் பெற்றிருக்கவில்லை.

அதற்குப் பதிலாக ஒவ்வொரு தேர்தலிலும் கட்சியின் வாக்கு எண்ணிக்கை குறைந்து கொண்டே போகின்றது. செல்வாக்கும் வீழ்ச்சியடைகின்றது என்று குறித்த முக்கியஸ்தர்கள் கட்சித் தலைமைக்கு சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடக்கம் கட்சிக்கு புதியதொரு சின்னம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(அ)

# யாழில் ஓட்டோவில் சாகசம் புரிந்து வன்முறையில் ஈடுபட்ட மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 03

யாழ். நகர் பகுதியில் இரவு வேளை ஓட்டோவில் சாகசம் புரிந்து, வன்முறையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் இரண்டு ஓட்டோக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அரியாலை மற்றும் பொம்மைவெளிப் பகுதியை சேர்ந்த மூவர் யாழ். பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் நேற்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

யாழ் நகரில் புத்தாண்டுக்காக செவ்வாய்க்கிழமை இரவுவேளை ஒன்றுகூடிய இளைஞர்கள் குழுவினர் ஓட்டோவில் சாகசம் காட்டியதுடன் இளைஞர் ஒருவரை கடுமையாக தாக்கியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் பரவிய நிலையில் சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் மீது உடன் நடவடிக்கை எடுக்கக்கோரி பல்வேறு தரப்பில் இருந்தும் அழுத்தங்கள் ஏற்பட்டதையடுத்து, குறித்த காணொளியை அடிப்படையாக கொண்டு யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்த விசாரணையின்போது மூவர் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை தொடர்ந்து சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலர் தலைமறைவாகியுள்ள நிலையில், குறித்த நபர்களை கைது செய்ய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-5)

# கடவுச்சீட்டு வழங்குவதில் மீண்டும் சிக்கல் நிலைமை

கொழும்பு, ஜன. 03

கடவுச்சீட்டு பெற்றுக் கொள்வதற்கான புதிய விண்ணப்பங்களுக்கு ஐந்து மாத காலத்தின் பின்னரே நேரம் ஒதுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு எதிர்வரும் மே மாதம் 09ஆம் திகதிக்குப் பின்னரான திகதிகளே ஒதுக்கப்படுகின்றன.

இதன் காரணமாக புதிய விண்ணப்பதாரிகள் சுமார் ஐந்து மாதங்கள் வரை காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு பற்றாக்குறை காரணமாகவே அரசாங்கம் இவ்வாறான நடவடிக்கையொன்றை மேற்கொண்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# வவுனியாவில் கத்திக்குத்து!

## ஒருவர் படுகாயம்

வவுனியா, ஜன. 03

வவுனியா இலுப்பையடிச் சந்தியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருவருக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு மோதலாக மாறியதில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கத்திக்குத்துக்கு இலக்கானவர் அங்கிருந்தவர்களின் உதவியுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-10)

# யாழ். நீதிமன்று முன்னால் வைத்து சாட்சியை வாளால் வெட்ட முயன்ற சந்தேக நபர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 03

யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு ஒன்றுக்கு சாட்சிக்காக வந்த நபரை வாளால் வெட்ட முயற்சித்த சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

வாள்வெட்டு வழக்கு ஒன்றின் சாட்சிக்காக கடந்த 2024.05.30 அன்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு வந்த நபரை, நீதிமன்றத்துக்கு முன்னால் வைத்து வாளால் வெட்டி தாக்க முற்பட்ட மூவரில் இருவர் அன்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் தலைமறைவாகி இருந்த பிரதான சந்தேகநபர் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் - ஆரியகுளத்துக்கு அருகாமையில் வைத்து குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவருக்கு வாள்வெட்டு தொடர்பாக மூன்று திறந்த பிடியாணை உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-05)

# பாராளுமன்ற ஊழியர்களுக்கு விடுமுறை கொடுப்பனவு ரத்து

கொழும்பு, ஜன. 03

பாராளுமன்ற ஊழியர்களுக்கு விடுமுறை கொடுப்பனவை வழங்குவதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமையை கருத்திற் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கொடுப்பனவை செலுத்தும்போது பாராளுமன்றத்துக்கு மாத்திரம் விசேட கவனம் செலுத்தினால் அது மோசமான முன்னுதாரணமாக அமையும் என பொருளாதார ஆலோசகர்கள் அரசாங்கத்துக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுமார் 1200 பாராளுமன்ற ஊழியர்கள் இந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள் எனக் கூறப்படுகிறது.

பாராளுமன்ற ஊழியர்கள் குழுவொன்று அண்மையில் அரசாங்கத் தலைவர்களைச் சந்தித்து இந்தக் கொடுப்பனவை வழங்குமாறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளது. (அ)

# போதிய உப்பு கையிருப்பில்!

கொழும்பு, ஜன. 03

நாட்டில் போதியளவு உப்பு கையிருப்பில் இருப்பதனால் அதனை இறக்குமதி செய்யத் தேவையில்லை என இலங்கை உப்பு கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் நிசாந்த சந்தபரண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் உப்பளங்களில் உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது.

விவசாயத்தில் போகங்களைப் போன்று உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. அவ்வாறு இன்றி தொடர்ச்சியாக உப்பு உற்பத்தி செய்யப்பட வேண்டும்.

அதேவேளை, உணவுக்காக பயன்படுத்தும் உப்புக்கு தட்டுப்பாடு இருக்காது. கைத்தொழில் தேவைகளுக்காக பயன்படுத்தக் கூடிய உப்பு வகைகளுக்கே தட்டுப்பாடு ஏற்படும்.

அம்பாந்தோட்டை, புத்தளம் ஆகிய இடங்களைத் தவிர தனியார் உப்பு உற்பத்தியாளர்களும் உப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர்.

சரியான திட்டங்களை வகுத்தால் உப்பை ஏற்றுமதி செய்ய முடியும் - என்றார். (அ)

# உணவுப்பொதி விலை அதிகரிக்கும் சாத்தியம்!

கொழும்பு, ஜன. 03


தற்போதைய அரிசி விலைக்கு அமைய எதிர்காலத்தில் உணவுப்பொதி ஒன்றின் விலையை அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்படும் என அநுராதபுர மாவட்ட சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அச்சங்கத்தின் தலைவர் இந்திக்க அருண குமார, தற்போதைய அரிசி நெருக்கடி காரணமாக அப்பகுதியிலுள்ள உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட 5,200 மெற்றிக் தொன் அரிசியின் இரண்டாவது தொகுதியான 580 மெற்றிக் தொன் அரிசி நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்தது.

இதன்படி, அரிசி விநியோகம் நேற்றுடன் நிறைவடைய உள்ளதாக, கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அரச வர்த்தக இதர சட்ட நிறுவனத்தின் தலைவர் ரவீந்திர பெர்னாண்டோ தெரிவித்தார். (அ)

# சிமெந்து பை ஏற்றிச் சென்ற லொறி குடை சாய்ந்து விபத்து



வவுனியா, ஜன. 03

வவுனியா ஓமந்தை பணிக கர்நீராவியில் நேற்று சிமெந்து ஏற்றிச் சென்ற லொறி குடை சாயந்து விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சிமெந்து ஏற்றிச்சென்ற லொறியே இவ்வாறு குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் லொறியில் பயணித்த இருவர் காயமடைந்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-10)

# பெரும்போகத்துக்கான நெல் கொள்வனவு இம்மாதம் முதல்!

கொழும்பு, ஜன. 03

பெரும்போகத்துக்கான நெல் கொள்வனவு இந்த மாதம் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. வர்த்தக மற்றும் உணவுப்பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர்.எம் ஜயவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கத்திடம் உள்ள அரிசி கையிருப்பை அதிகரிக்கவும், லங்கா சதொச நிறுவனங்களின் ஊடாக அரிசி விற்பனையை விரிவுபடுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டுகளை விட இந்த ஆண்டு விவசாயிகளிடம் இருந்து அதிகளவான நெல்லை கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் வர்த்தக மற்றும் உணவுப்பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஆர்.எம் ஜயவர்த்தன தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 03.01.2025 வெள்ளிக்கிழமை ඊළනාඩු
பிலவ வருடம், மார்கழி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சீனர்களின் மோசடி

இலங்கையில் அதிகளவில் இணைய வழி நிதி மோசடிகளில் ஈடுபடுவர்கள் சீனர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு மட்டும் 200 சீனர்கள் மோசடிக் குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவ்வாறு கைது செய்யப்படுபவர்களை சீனாவுக்கு நாடு கடத்துவது தொடர்பில் கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் பேசி வருகின்றது. இவ்வாறான இணைய வழி நிதி மோசடிகளால் வெளிநாட்டவர்களே அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர் - இவ்வாறான நிதி மோசடிகளில் ஈடுபடுபவர்களும் வெளிநாட்டவர்களை இலக்கு வைத்தே செயல்படுவதாகவும் தெரியவந்திருக்கின்றது. இந்த விடயங்களை இலங்கை குற்றபுலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

சீனர்களின் செல்வாக்கிற்குட்ட தென்னமெரிக்க மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இவ்வாறான பிரச்னைகள் ஒரு நெருக்கடியாக மாறியிருக்கின்றது. கடந்த ஆண்டு சைபர் குற்றங்களில் ஈடுபட்ட சீனர்கள் பலர் சிம்பாப்வேயில் கைது செய்யப்பட்டனர். இணைய வழி மோசடி நடவடிக்கைகளால் சீனாவின் நிதி நகர்வுகள் தென்னமெரிக்க நாடுகளில் சிக்கலாக்கியுள்ளன. பிரித்தானிய ஊடகமான பினான்ஸியல் டெய்லி பத்திரிகையினால் வெளியிடப்பட்ட ஆவணப் படமான Dirty Money, Cartels, and Underground Banks இல் - தென்னமெரிக்காவில் சீனர்களின் இரகசிய இணைய வழி நிதி நடவடிக்கைகள் எவ்வாறு பிரமாண்டமான நிலையில் வளர்சியுற்றிருக்கின்றது என்பது வெளிப்படுத்தப்பட்டது.

ஓய்வு பெற்ற அமெரிக்க உளவுத் துறை (சி.ஐ.ஏ) அதிகாரியும், ஓய்வுபெற்ற அமெரிக்க திறைசேரித் திணைக்களத்தின் முகவருமான John Cassara இது பற்றிக் கூறும் போது, சீனக் குடியேற்றவாசிகள் பழமையான முறையொன்றில் இந்த விடயங்களை கையாளுகின்றனர். இதனை வெளியிலுள்ளவர்கள் கண்டுபிடிப்பது மிகவும் கடினமானது. அவர்கள் இந்த விடயத்தை தங்களுக்குள் நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்கின்றனர். இது பாரம்பரிய கிழக்காசிய ஹவாலா முறையாகும்.

2021இல் முதல் முறையாக சீனர்களின் பணச் சலவை நடவடிக்கை அமெரிக்காகாவினால் இனங்காணப்பட்டது. மெக்சிக்கோவில் பல்வேறு வகையிலான பணச் சலவை அணுகுமுறைகளில் சீன வர்த்தகர்கள் ஈடுபட்டுவருவதாக அமெரிக்க உளவுத் துறை கண்டறிந்துள்ளது. இவ்வாறான நிதிகள் அனைத்தும் தென்னமெரிக்க நாடுகளிலுள்ள சீன இடைத்தரகர்கள் மூலம், பாதாள உலக வங்கி முறைமையின் ஊடாக கையாளப்படுகின்றன.

இலங்கையின் துறைமுக நகரம் தொடர்பில் முன்னாள் அமெரிக்கத் தூதுவர் அலைனா டெப்ளிஸ் இந்த எச்சரிக்கையை வெளியிட்டிருந்தார். துறைமுக நகரம் இயங்க ஆரம்பித்தால் அது பணச் சலவையின் மையமாக மாறுவதற்கான சாத்தியமுள்ளதாக அவர் எச்சரித்திருந்தார். தற்போது அந்த நிலைமை கண்கூடாகத் தெரிய ஆரம்பிக்கின்றது.

ஊழலை இல்லாதொழிக்கப் போவதான வாக்குறுதிகளுடன் அதிகாரத்தை கைப்பற்றியிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இதனை எவ்வாறு கையாளப் போகின்றது? சீனாவுடன் நெருங்கிய வர்த்தக தொடர்புகளை பேணிவரும் நாடுகள், அதேபோன்று, பொருளாதார ரீதியில் சீனாவில் தங்கியிருக்கும் நாடுகளால் - ஒரு கட்டத்திற்கு மேல் இந்த விடயங்களை கையாள முடியாதுள்ளது - ஏனெனில் இதனை தடுக்க வேண்டுமாயின் சீனாவின் உதவி தேவை. ஆனால் சீனா அதற்கு பெரியளவில் உதவி செய்ய மறுக்கின்றது. ஏனெனில் பாதாள வங்கி முறைமைக்கு சீனாவின் மறைமுக ஆசீர்வாதம் உண்டு என்றே கருதப்படுகின்றது.

# மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை அறிந்து உச்ச கட்ட செயல்பாடுகளை முன்னெடுக்கவும்

### யாழ். அரச அதிபர் பிரதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.03

பிரதேச செயலக ரீதியாக உதவி தேவைப்படும் மக்களை இனங்கண்டு தேடிச் சென்று, அவர்கள் பிரச்னைகளை அறிந்து, அதற்குரிய தீர்வுகளை வழங்கக்கூடிய உச்ச கட்ட செயல்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்துள்ளார்

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ‘கிளீன் சிறீலங்கா’ நிகழ்ச்சித் திட்ட ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

“கடந்த 2024 ஆம் ஆண்டு அனைவரும் ஒன்று சேர்ந்து மக்களுடைய அபிலாசைகளை பூர்த்தி செய்யத்தக்க வகையிலே செயல்பட்டதற்கு நன்றியை தெரிவித்த அரசாங்க அதிபர், மலர்ந்திருக்கும் இனிய புதுவருடமானது அனைவருக்கம் சுபீட்சமாகவும் சந்தோசமாகவும் அமைய தனது வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

அபிவிருத்தி சார்ந்த திட்டங்களை எமது மாவட்டத்தில் முன்னெடுக்கும் போது ஈடுகொடுக்கக் கூடியதாகவும், பயனுறுதி வாய்ந்தாகவும், மக்கள் மயப்படுத்தப்பட்டதாகவும், வகுக்கப்பட்டு முன் தயார் படுத்தலுடன் நடைமுறைப்படுத்துவதன் மூலம் வெற்றியடைய முடியும். மக்களின் முறைப்பாடுகளை தனி ஒருவராலோ அல்லது ஒரு திணைக்களத்தினாலோ பூர்த்தி செய்ய முடியாது. மாறாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படும் போது பயனைப் பெற்றுக்கொள்ள முடியும்”- என்றார். (எ)

# பொலிஸார் பாவனையிலிருந்து காணியை விடுவிக்க வேண்டும்

### வவுனியா அபிவிருத்தி குழு கூட்டத்தில் ஆராய்வு

வவுனியா, ஜன.03

கனகராயன்குளம் தெற்கு அபிவிருத்திச் சங்கத்தின் காணியை பொலிஸாரின் பாவனையில் இருந்து விடுவிப்பது தொடர்பில் மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் ஆராயப்பட்டது.

வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, வவுனியா மாவட்டத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பிலும், கனகராயன்குளம் தெற்கு அபிவிருத்திச் சங்கத்தின் காணியை பொலிஸாரின் பாவனையில் இருந்து விடுவித்தல் தொடர்பாகவும், பொருளாதார மத்திய நிலையத்தை திறப்பது உட்பட பல்வேறு மிக முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்பட்டு அதற்குரிய தீர்மானங்களும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ஜெகதீஸ்வரன், செ. திலகநாதன், ப. சத்தியலிங்கம், து. ரவிகரன், முத்துமுகமது மற்றும் மாவட்ட செயலாளர் சரத் சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் திரேஷ் குமார், பிரதேச செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள்,

பொலிஸார், இராணுவத்தினர், கிராம அபிவிருத்தி சங்கத்தின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

### திருவாசகத் தேன் சிறப்பு சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.03

மானிப்பாய் அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தின் திருவெம்பாவை உற்சவ தின தொடர் சிறப்புச் சொற்பொழிவு நாளை 4 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை வரை காலை 6. 15 மணிக்கு நடைபெறவுள்ளது.

தொடர் சொற்பொழிவை செஞ்சொல்வேந்தர் சைவப் புலவர் செ. த. குமரன் “திருவாசகத் தேன்” என்னும் விடயப் பொருளில் நிகழ்த்தவுள்ளார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.


### ‘மாணிக்கவாசகரும் திருவேசறவும்’ சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.03

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 38 பண்ணாலை திருவருள்மிகு சிவபூதவராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் இன்று 3 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து இளஞ்சைவப் புலவர் ச. நவநீதன் “மாணிக்கவாசகரும் திருவேசறவும்” என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
உணர்ச்சிவசமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாக செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர்கள், நண்பர்கள் உங்களிடம் முககிய விஷயங்களை பகிர்ந்து கொள்வார்கள்.

**இடபம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக் குள் இருந்த மனப்போர் நீங்கும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். செலவுகளை குறைக்க திட்டமிடுவீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் ஒருவரை மாற்றி ஒருவர் குறைக் கூறி கொண்டிருக்க வேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும்.

**சிம்மம்**
உற்சாகமாக இருப்பீர்கள். பழைய உறவினர், நண்பர்கள் தேடிவந்து பேசுவார்கள். அரசாங்க விஷயம் நல்ல விதத்தில் முடியும். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அமோகமான நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்து கொள்வீர்கள். குடும்பத்தினருடன் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**துலாம்**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. மகளுக்கு நல்ல வரன் அமையும். பழைய கடனைத் தீர்க்க புது வழி பிறக்கும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். சொத்து பிரச்னைக்கு நல்லதீர்வு கிடைக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். முயற்சிகள் நிறைவேறும் நாள்.

**தனுசு**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி அமைதி கிட்டும். குடும்பத்தில் நிம்மதி உண்டு. வராது என்றிருந்த பணம் வரும். விலகி சென்ற உறவினர்கள் வலிய வந்து பேசுவார்கள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் மேற்பார்வையில் முடிப்பது நல்லது. குடும்பத்தில் சண்டை சச்சரவு வந்து நீங்கும். உங்களை நீங்களே குறைத்து மதிப்பிடாதீர்கள்.

**கும்பம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். வாகனம் தொந்தரவு தரும். உடல் அசதி சோர்வு வந்து விலகும். ஆதாயம் தரும் நாள்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்கள் கைகூடும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடனைத் தீர்க்க உதவிகள் கிடைக்கும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள்.

# பளை - தம்பகாமம் பகுதியில் நேற்று பெருமளவு கஞ்சாவுடன் இருவர் கைது

கிளிநொச்சி, ஜன.03

பளை - தம்பகாமம் பகுதியில் பெருமளவு கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றைதினம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் தம்பகாமம் பகுதியில் வைத்து 23 கிலோ 165 கிராம் கஞ்சாவுடன் 31, 45 வயதுடைய இந்த இருவரும் கைது செய்யப்பட்டனர்.



மேலதிக விசாரணைகளுக்காக இவர்கள் இருவரும் சான்றுப்பொருட்களுடன் பளை பொலிஸ் நிலையத்தில் பாரப் படுத்தப்பட்டனர்.

இவர்களை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக் கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (எ-05)

# 12 இந்திய மீனவர்களுக்கு 8ஆம் திகதி வரை மறியல்

யாழ்ப்பாணம், ஜன.03

எல்லை தாண்டி வந்து வடமராட்சி கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள், கடற்படையினரின் கடமைக்கு இடையூறு விளைவித்து, அவர்கள் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நீரியல்வளத் திணைக்களத்தினரால் தொடரப்பட்ட வழக்கில் கடந்த நவம்பர் 27ஆம் திகதி 12 இந்திய மீனவர்களும் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டனர். இருப்பினும், கடற்படையினரைத் தாக்கியமை தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கில் குறித்த மீனவர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு பருத்தித்துறை நீதிமன்றில் நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன் போது, மீனவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டனர். இதனையடுத்து, இந்திய மீனவர்கள் மீதான குற்றப்பத் திரத்தை தாக்கல் செய்யுமாறு நீதிவான் பருத்தித்துறை பொலி ஸாருக்கு பணிப்புரை விடுத்ததுடன் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு உத்தரவிட்டுள்ளார். (எ-02)

# அரச சேவைமீது மக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையீனத்தை மாற்ற வேண்டும்

## பருத்தித்துறை பிரதேச செயலாளர் சத்தியசீலன்

வடமராட்சி, ஜன.03

பொதுமக்களுக்கு அரச சேவைமீதுள்ள நம்பிக்கையீனத்தை மாற்ற வேண்டியது ஒவ்வொரு அரச உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும் என்று பருத்தித்துறை பிரதேச செயலாளர் சி. சத்தியசீலன் தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"பொதுமக்கள் அனைவருக்கும் இலகுவான மக்கள் சேவையை அரச உத்தியோகத்தர்களாகிய நாம் வழங்க வேண்டும். பொதுமக்கள் மீது தனிப்பட்ட ரீதியில் பழி வாங்கும் செயல்பாடுகளை மேற் கொள்ளாது அரச சேவைக்குரிய நியமத்துடன் செயல்பட வேண்டும்.

நாங்கள் இந்த வருடத்துக்கான வேலைத்திட்டங்கள், கடமைகளை சிறப்பான முறையில் ஆரம்பித்து பொதுமக்களுக்கான சேவையை கிராம மட்டத்திலும் பிரதேச செயலக மட்டத்திலும் சிறப்பான முறையில் முன்னெடுக்க வேண்டும்"- என்றார். (எ-02)

# விபத்தில் சிக்கிய கொழும்பு பல்கலை. மாணவன் யாழ்ப்பாணத்தில் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன.03

மோட்டார் சைக்கிள் - கார் மோதி இடம்பெற்ற விபத்தில் சிக்கிய கொழும்பு பல்கலைக் கழக இறுதியாண்டு மாணவன் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உயிரிழந்தார். வவுனியா வைரவ புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த சந்திரபோஸ் சஜீகாந் (வயது - 23) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த மாணவன் தனது வீட்டில் இருந்து நண்பரின் வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது குருமன்காடு பகுதியில் வீதியில் நிறுத்தி வைத்திருந்த காருடன் மோதி விபத்து ஏற்பட்டது.இந்த நிலையில் சிகிச்சைக் காக வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இருப்பினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். (எ-05)

# தொலைபேசி விற்பனை நிலையத்தில் திருட்டு

கிளிநொச்சி, ஜன.03

கிளிநொச்சி, கனகபுரம் வீதியில் ரயில் கடவைக்கு அருகாமையில் இயங்கி வந்த கையடக்க தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் திருடப்பட்டன.

இது குறித்து கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனடிப்படையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி விஜயராஜா தலைமையிலான குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

ஆரம்பகட்ட விசாரணையில், கடையில் பொருத்தப்பட்டுள்ள சி. சி. ரீவி காட்சிகளின் அடிப்படையில் இருபது வயது மதிக்கத்தக்க இரண்டு நபர்கள் குறித்த திருட்டில் ஈடுபட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. சுமார் ஓர் இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில்-சஜித் ஒன்றிணைய பேச்சுக்கள் அடுத்த வாரம்!

## இதுவே கடைசி முயற்சியாம்

கொழும்பு, ஜன. 03

**ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை ஒன்றிணைப்பதற்குரிய பேச்சு அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ளது என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

இரு தரப்பினரையும் இணைப்பதற்கு இதற்கு முன்னர் முன்னெடுக்கப்பட்ட பேச்சுகள் தோல்வி அடைந்த நிலையில், இதுவே கடைசி முயற்சியாக முன்னெடுக்கப்படவுள்ளது.

பேச்சு வெற்றியளிக்கும் பட்சத்தில் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் கூட்டாகக் களமிறங்குவதற்கும், அவ்வாறு இல்லையேல் தனிவழி செல்வதற்கும் இரு தரப்புகளும் அவதானம் செலுத்தியுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையவேண்டும் என்ற கோரிக்கை ஐக்கிய மக்கள் சக்திக்குள் அதிகரித்துள்ளதால், அக்கோரிக்கையை நிராகரிக்க முடியாத நிலை சஜித் பிரேமதாஸவுக்கு ஏற்பட்டுள்ளது.

எனவே, இரு தரப்பு இணைவுக்குரிய சாத்தியம் அதிகமாக உள்ளது எனவும் அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# போலிக் கடவுச்சீட்டுடன் இரு இலங்கையர் கைது!

கொழும்பு, ஜன. 03

போலி கடவுச்சீட்டை பயன்படுத்தி நேபாளம் ஊடாக இங்கிலாந்து செல்ல முற்பட்ட இலங்கையர்கள் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் முதலில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்.

சந்தேக நபர் நேபாளத்துக்குச் செல்லும் இந்திய விமான சேவையில் பயணிப்பதற்காக நேற்று முன் தினம் விமான நிலையத்துக்கு வந்திருந்தார்.

ஆனால் குடிவரவு கருமபீடத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

குடிவரவு கருமபீட அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் அந்த நபரை பரிசோதித்ததில், அவருடைய கடவுச்சீட்டு போலியானது என்றும், இதே போன்ற அம்சங்களைக் கொண்ட மற்றொரு நபரின் தகவலைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது என்றும் கண்டறிந்தனர்.

மேலும், விசாரணையில் மற்றொரு நபரும் கைது செய்யப்பட்டார். (அ)

# மாத்தறை சிறையில் மரம் முறிந்து விழுந்ததில் கைதி ஒருவர் மரணம்!

## 11 கைதிகள் காயம்

கொழும்பு, ஜன. 03

மாத்தறை சிறைச்சாலை வளாகத்தில் உள்ள அரச மரம் முறிந்து விழுந்ததில் கைதியொருவர் உயிரிழந்துள்ளதுடன் 11 கைதிகள் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

12 கைதிகள் காயமடைந்த நிலையில், மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் கைதி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். மிதிகம துர்க்கி பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரே இதன்போது உயிரிழந்துள்ளார். காயமடைந்த கைதிகள் 25, இற்கும் 52 வயதுக்கும் இடைப்பட்ட வயதுகளை உடைய தெனிபிட்டிய, மிரிஸ்ஸ, வெலிகம, காலி, மாத்தறை, கந்தர, படபொல, தெய்யந்தர மற்றும் கல்கமுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இந்நிலையில் ஏனைய கைதிகள் அனைவரையும் வேறு கட்டடத்தில் பாதுகாப்பாக தங்க வைக்க சிறைச்சாலை அதிகாரிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், மாத்தறை சிறைச்சாலையில் உள்ள கைதிகளில் ஒரு பகுதியினர் பாதுகாப்பாக வேறு சிறைக்கு மாற்றப்படவுள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. மேலும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத் தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மக்கள் கோரிய மாற்றத்தை ஏற்படுத்துவது எம் பொறுப்பு

## நீதி அமைச்சர் ஹர்ஷன

கொழும்பு, ஜன. 03

மக்கள் கோரிய மாற்றத்தை மேற்கொள்வது இந்த அரசாங்கத்தின் பொறுப்பாகும். அந்த மாற்றத்தை ஏற்படுத்தும்போது பாரிய பொறுப்பு அரச ஊழியர்களுக்கே இருக்கிறது. அதனால் பொது மக்களுக்காக நாங்கள் இந்த மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

புதுவருடத்தில் நீதி மற்றும் ஒருமைப்பாடு அமைச்சின் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் புதன்கிழமை நீதி அமைச்சு வளாகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பல வருடங்களாக மக்கள் எதிர்பார்த்திருந்த மாற்றம் ஏற்பட்டு தற்போது புதிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்திருக்கிறது. புதிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்து புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டது. புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அரச சேவை புதிதாக நியமிக்கப்படவில்லை. என்றாலும் இந்த அரசாங்கத்தை அதிகாரத்துக்கு கொண்டுவர அரச ஊழியர்கள் பாரியளவில் அர்ப்பணித்தார்கள். தபால் மூல வாக்குகளில் அது தெளிவாகியுள்ளது.

மேலும் சட்டத்தின் ஆட்சியை பாதுகாப்பதற்கு எமது அமைச்சுக்கு பாரிய பொறுப்பு இருக்கிறது. இந்த அமைச்சில் அமைச்சர், செயலாளர், மேலதிக செயலாளர் என பல்வேறு பதவிகள் இருக்கின்றன. இவை அனைத்தும் உங்களுக்கு சாட்டப்பட்டிருக்கும் பொறுப்புக்களே அன்றி கிரீடம் அல்ல. அதனால் எங்கள் அனைவருக்கும் பொறுப்புக்கள் இருக்கின்றன. அவை மாற்றமடைய முடியும். அணியாக செயற்படும் போது அனைவரதும் பொறுப்புக்களும் முக்கியமாகும். அதனால் சிறந்த நோக்கத்துடன் முன் செல்வதற்கு அனைவருக்கும் முடியுமாகட்டும் என பிரார்த்திக்கிறேன்-என்றார். (அ)

# கடந்த அரசுகளை விமர்சிக்காமல் வாக்குறுதியை நிறைவேற்றுங்கள்!

## நாமல் ராஜபக்ஷ கோரிக்கை

கொழும்பு, ஜன. 03

நாட்டு மக்களுக்கு பல வாக்குறுதிகளை வழங்கியே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆகவே கடந்த கால அரசாங்கங்களை விமர்வித்துக் கொண்டிருக்காமல் நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் முறையாக நிறைவேற்ற வேண்டும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று முன் தினம் புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ராஜபக்ஷர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புரிமைகளை குறைப்பதால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியும் என்று அரசாங்கம் கருதினால் அதற்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

கடந்த அரசாங்கங்களை விமர்சித்துக் கொண்டிருக்காமல் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் இந்த ஆண்டு நிறைவேற்ற வேண்டும்-என்றார். (அ)

# இலங்கையில் பிறப்பு வீதம் வீழ்ச்சி!

கொழும்பு, ஜன. 03

இலங்கையில் வருடாந்த பிறப்பு வீதம் கணிசமான வீழ்ச்சியை பதிவு செய்துள்ளதாக சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

அதன்படி, இலங்கையின் வருடாந்த பிறப்பு வீதம் 350,000 இலிருந்து 250,000 ஆக குறைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அது மாத்திரமின்றி புற்றுநோய், சர்க்கரை நோய் போன்ற நோய்களாலும் குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே தற்போதைய சூழ்நிலையில் குழந்தைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் விசேட வைத்தியர் தீபால் பெரேரா வலியுறுத்தினார். (அ)

# இரு வேறு பகுதிகளில் இருந்து சட்டவிரோத வாகனங்கள் மீட்பு!

கொழும்பு, ஜன. 03

சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு, போலியான ஆவணங்களைப் பயன்படுத்தி ஒன்று சேர்க்கப்பட்ட ஜீப் ரக வாகனமொன்று பிங்வத்தை □ பாடசாலை மாவத்தை பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இரத்மலானை ரயில் நிலையத்துக்கு அருகிலிருந்து இரண்டு லாண்ட் ரோவர் ரக வாகனங்களும் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் 7 கோடி ரூபாய் பெறுமதி கொண்ட குறித்த 3 வாகனங்களும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினூடாக வீதி பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பழைய வாகனங்களின் இலக்கத்தகடுகளின் கீழ் போலியாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம் குறித்த வாகனங்களின் உரிமையாளர் என சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட பொது ஜன பெரமுனவின் மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அமல் சில்வா, வாக்குமூலம் பெறப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வாகனங்கள் தொடர்பான சமர்ப்பணங்கள் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டு மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பொலிஸார் அறிவித்துள்ளனர். (அ)

# 2024 இல் வரலாற்றிலேயே அதிகூடிய வருமானம் ஈட்டிய இலங்கை சுங்கம்!

கொழும்பு, ஜன. 03

தமது வரலாற்றில் வருடமொன்றில் ஈட்டிய அதிகூடிய வருமானத்தை, 2024 ஆம் ஆண்டில் இலங்கை சுங்கம் பதிவு செய்துள்ளது.

அதன்படி, 2024 ஆம் ஆண்டில் இலங்கை சுங்கம் 1.5 டிரில்லியன் ரூபாவினை வருமானமாக ஈட்டியுள்ளதாகச் சுங்க ஊடக பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார்.

அரசாங்கத்தின்வரிக்கொள்கை, இறக்குமதியின் அளவு அதிகரிப்பு மற்றும் வரி வசூல் செயல்முறையைத் திறம்படச் செய்வதற்குச் சுங்க நிர்வாகம் மேற்கொண்ட மறுசீரமைப்புகள் என்பன இந்த வருவாயை ஈட்டுவதில் தாக்கம் செலுத்தியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் வழங்கிய வரிவருவாய் இலக்குகளைப் பூர்த்தி செய்து நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கு அதிகூடிய பங்களிப்பை வழங்க முடிந்தமைக்காக இலங்கை சுங்க தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துவதாகவும் சுங்க ஊடக பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்று கூறிய பொய்களால் அரசுக்கு இன்று பேராபத்து!

## நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 03

**“ஆயிரக்கணக்கான பொய்களை அள்ளிவீசியே தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றியது. அன்று அக்கட்சியினர் கூறிய பொய்களே அவர்களுக்கு இன்று ஆபத்தாக மாறியுள்ளது.” என்று பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

செய்ய முடியாத அதேபோல நடைமுறைக்கு சாத்தியமற்ற ஆயிரக்கணக்கான பொய்களைக் கூறியே தேசிய மக்கள் சக்தி ஆட்சியைக் கைப்பற்றியது. எம்மால் செய்யக்கூடிய விடயங்களை மாத்திரமே நாம் தேர்தல் காலங்களில் உறுதிமொழிகளாக வழங்கினோம்.

தாம் கூறிய பொய்களே அரசாங்கத்துக்கு இன்று ஆபத்தாக மாறியுள்ளது. எனவே, தற்போதாவது உண்மை நிலைமையை நாட்டு மக்களுக்கு கூறவேண்டும். குறைந்தபட்சம் நாட்டு மக்களுக்கு மூவேளை உண்ணக்கூடிய வகையிலான சூழ்நிலைமையை அரசாங்கம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

ஆட்சிக்கு வந்த பிறகு மின் கட்டம் குறைக்கப்படும் என தேசிய மக்கள் சக்தி உறுதியளித்தது. அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. மக்களிடம் கருத்துகோருகின்றோம் எனக் கூறி தற்போது காலம் கடத்தப்படுகின்றது-என்றார். (அ)

# பெண் கைதிகளை பார்வையிட்ட அமைச்சர் சரோஜா போல்ராஜ்!



கொழும்பு, ஜன. 03

சிறுவர்கள் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் புத்தாண்டு முதல் நாளில் கொழும்பு வெலிக் கடை சிறைச்சா லைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற் கொண்டார்.

சிறைச்சாலைக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர், அங்குள்ள பெண் கைதிகளைச் சந்தித்துத்து பேசினார்.

பெண் கைதிகளின் நலன்கள் மற்றும் தற்போது எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து கேட்டறிந்த அமைச்சர், அவர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களுடன் பரிசுகளையும் வழங்கினார். சிறுவர் மற்றும் மகளிர் விவ கார பிரதி அமைச்சர் கலாநிதி நாமல் சுதர்ஷன, அமைச்சின் செயலாளர் கே.டி. ஆர். ஓல்கா மற்றும் அவரது அமைச்சின் ஏனைய உயர் அதிகாரிகளும் இந்த விஜயத்தில் பங்கெடுத்தனர். (அ)

# எரிபொருள் விலை குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜன. 03

எரிபொருள் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிகையில்-எரிபொருள் விலையை குறைப்பதாக அரசாங்கம் தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்தது. எனினும் ஆட்சியமைத்த தன் பின்னர் அது தொடர்பில் சாதகமான விடயங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

நாட்டில் கடந்த கால அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை மீற முடியாது என்பதால் எரிபொருள் விலையை குறைக்க முடியாது என தற்போதைய ஆளும் தரப்பினர் கூறுகின்றனர். இவ்வாறானதொரு பதிலுக்காக மக்கள் ஆணையை வழங்கவில்லை.

மூன்றில் இரண்டுக்கு அதிகமான பெரும்பான்மை அரசாங்கத்துக்கு இருக்கிறது. அவ்வாறு முழு அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு எரிபொருள் விலையை குறைக்க முடியாது எனக் கூறுவதை ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

ஆதலால் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள ஓட்டோ சாரதிகளின் நன்மை கருதி எரிபொருள் விலையை குறைக்குமாறு நாம் வேண்டுகோள் விடுக்கிறோம்-என்றார். (அ)

புலமைப்பரிசில் பரீட்சை சர்ச்சை:

# அனைத்து மாணவர்களுக்கும் 3 கேள்விகளுக்கு முழுப் புள்ளி!

கொழும்பு, ஜன. 03

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் முன்கூட்டியே வெளியானதாக குறிப்பிடப்பட்டுள்ள மூன்று கேள்விகளுக்காக அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் இலவச புள்ளிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச். ஜே.எம்.சி.அமித் ஜயசுந்தர நேற்று முன் தினம் வெளியிட்ட அறிக்கையில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதலாவது வினாத்தாளில் உள்ளடக்கப்பட்ட 03 வினாக்கள் பரீட்சைக்கு முன்னதாக வெளியிடப்பட்டதாக கூறி உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட வந்த வழக்கின் தீர்ப்பு கடந்த 31ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

அந்த தீர்ப்பின்படி, பரீட்சைகள் ஆணையாளர் அமுல்படுத்துவதற்கான மூன்று பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

அதாவது-1 விடைத்தாள்களுக்கான புள்ளிகளை வழங்கும் போது சர்ச்சைக்குரிய மூன்று கேள்விகளை நீக்கி மதிப்பீடுகளை மேற்கொள்ளவும்.

2 குறித்த மூன்று கேள்விகளுக்காக அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் இலவச புள்ளிகளை வழங்குதல்.

3 முதலாவது வினாத்தாளுக்காக பரீட்சையை மீண்டும் நடத்துதல்.

இந்த பரிந்துரைகளில், மிகவும் பொருத்தமான நடவடிக்கையை பின்பற்றுமாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

இதன்படி, ஒவ்வொரு பரிந்துரைகளையும் அமுல்படுத்தும் போது ஏற்படக்கூடிய பொருத்தமான மற்றும் பொருத்தமற்ற தாக்கங்கள் தொடர்பில் இது மிகவும் நியாயமான மற்றும் பொருத்தமான இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வினாக்களுக்காக அனைத்து பரீட்சார்த்திகளுக்கும் இலவச புள்ளிகளை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்திற்கு அமைய மதிப்பீட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்து பெறுபேறுகளை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார். (அ)

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஜன. 03

அநுராதபுர பொலிஸ் பிரிவில், மோட்டார் சைக்கிளில் ஹெரோயின் போதைப் பொருளை எடுத்துச் சென்ற சந்தேக நபர் ஒருவரை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர், 28 வயதுடைய அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய அநுராதபுரம் நகரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து, 30 கிராமுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் சந்தேக நபர் பயணித்த மோட்டார் சைக்கிள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (அ)

# 63 அத்தியாவசியப் பொருள்களுக்கு விசேட பண்டவரி தொடர்ந்து அறவீடு

கொழும்பு, ஜன. 03

அரிசி, பருப்பு, வெள்ளைப் பூடு, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட 63 அத்தியாவசிய பொருள்களுக்கு தற்போதுள்ள விசேட பண்ட வரியை தொடர்ந்தும் பேணுவதற்கு நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

முன்னதாக, டிசெம்பர் 31ஆம் திகதி வரை உரிய வரிகளை அமுல்படுத்தும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

இவ்வாறு பண்டங்களுக்கான வரியில் மாற்றங்களை ஏற்படுத்தாது பேணுவதன் மூலம் பொருள்களின் விலையிலும் அதிகரிப்பு ஏற்படுத்தப்படாது என அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், உள்ளூர் விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில்களை பாதுகாக்கும் நோக்கில் அமுல்படுத்தப்படும் வரி விகிதங்களிலும் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# முறைப்பாடுகளைப் பதிவு செய்ய ‘ஈ-டிரபிக்’ கைத்தொலைபேசி செயலி அங்குரார்ப்பணம்

கொழும்பு, ஜன. 03

போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளைப் பொதுமக்கள் பதிவு செய்வதற்காக “ஈ-டிரபிக்“ என்ற கையடக்க தொலைபேசி செயலி பொலிஸாரால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

கிளீன் சிறிலங்கா - 2025 திட்டத்திற்கு இணையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு பிரவேசித்து இந்த செயலியை இலகுவாகத் தரவிறக்கம் செய்ய முடியும்.

அந்த செயலி மூலம் பொது மக்கள் தங்களது முறைப்பாடுகளை உடனடியாக முன்வைக்க முடியும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த கையடக்க தொலைபேசி செயலியைப் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய நேற்று முன் தினம் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

நாளாந்தம் இடம்பெறும் வாகன விபத்துக்களைக் குறைத்துக் கொள்வதற்குப் பொதுமக்களின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஈ-டிரபிக்“ என்ற கையடக்க தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலிடமும் தினேஷிடமும் விரைவில் வாக்குமூலம் பதிவு

## குற்றப்புலனாய்வு திணைக்களம் தீர்மானம்

கொழும்பு, ஜன. 03

**முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அங்கீகாரம் வழங்கப் பட்டமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் பிரதமர் தினேஸ் குண வர்தன ஆகியோரிடம் வாக்குமூலங்களை பதிவு செய்வதற்கு குற்றப்புலனாய்வு திணைக்களம் தீர்மானித்துள்ளது.**

நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டுக்கு தீர்வு பெற்றுத்தரும் வகையில் இந்திய கடன்திட்டத்தின் கீழ் 182 வகையான மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெலவினால் அமைச்சரவையில் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

அத்துடன், தற்போது, இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதன் பின்னர் அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர், இது தொடர்பில் முன்னாள் பிரதமர் தினேஸ் குணவர்தனவிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்படவுள்ளது.

நாட்டுக்கு தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய நீதவான் லோச்சனி அபேவிக்ரம குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு இந்த அனுமதியை வழங்கியுள்ளார்.

முன்னதாக, இந்த சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பந்துல குணவர்தன, ரமேஷ் பத்திரன, ரொஷான் ரணசிங்க, டக்ளஸ் தேவானந்தா, ஹரீன் பெர்னாண்டோ, பிரசன்ன ரணதுங்க, விஜேதாச ராஜபக்ஷ, விதுர விக்கிரமநாயக்க, காஞ்சன விஜேசேகர ஆகியோரிடமும் குற்றப் புலனாய்வு திணைக்களம் வாக்குமூலம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாராளுமன்றம் 7ஆம் திகதி கூடும்

கொழும்பு, ஜன. 03

நாடாளுமன்றம் ஜனவரி 7ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை கூடும் என பாராளுமன்றச் செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் வைத்திய கலாநிதி ஜகத் விக்ரமரத்ன தலைமையில் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய ஜனவரி 7ஆம் திகதி காலை 9.30 மணி முதல் 10.30 வரை வாய்மூல விடைக்கான கேள்விக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து காலை 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை "மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை 2024" தொடர்பில் ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

ஜனவரி 8ஆம் திகதி காலை 9.30 மணி முதல் 10.00 மணி வரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் காலை 10.00 மணி முதல் 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து காலை 10.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளைகள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, சிட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழான ஒழுங்கு விதி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி என்பன விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அன்றையதினம் மாலை 5.00 மணி முதல் 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 9ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 முதல் மாலை 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.இதன் பின்னர் காலை 10.30 மணி முதல் காலை 11.30 மணி வரை வரை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளை, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப் பட்ட ஆறு கட்டளைகள், நலன்புரி நன்மைகள் சட்டத் தின் கீழ் பிரசுரிக்கப் பட்ட ஒழுங்குவிதி என்பன விவாதிக்கப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து மாலை 5.30 மணிவரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் நடத்தப்படவுள்ளது. (அ)

# 20,000 மெற்றிக் தொன் வெங்காயம் இறக்குமதி செய்ய அரசு தீர்மானம்!

கொழும்பு, ஜன. 03

வெங்காயத்தை இறக்குமதி செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்தின் படி 20,000 மெற்றிக் தொன் வெங்காயத்தை முதற்கட்டமாக இறக்குமதி செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அதன் தலைவர் ரவீந்ர பெர்ணான்டோ இதனை குறிப்பிட்டார்.

வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கான விலைமனு கோரல் இன்றுடன் நிறைவடைகிறது.

தற்போது, சந்தையில் வெங்காயத்துக்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ள காரணத்தால் இந்த மாதம் 31ஆம் திகதிக்குள் 30 ஆயிரம் மெற்றிக் தொன் வெங்காயத்தை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அண்மையில் தீர்மானித்திருந்தது.

இதேவேளை, கடந்த சில நாட்களாக சந்தையில் வீழ்ச்சியடைந்திருந்த முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# பாதுகாப்பு தொடர்பில் எனக்கு பிரச்னையில்லை

## கூறுகிறார் மைத்திரிபால

கொழும்பு, ஜன. 03

பாதுகாப்பு தொடர்பில் எனக்கு எவ்வித பிரச்னையும் இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது. அவர்களின் வேலைத் திட்டங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளோம். அவர்களுக்கும் ஒரு வாய்ப்பு வழங்கவேண்டும்.

எனக்கான பாதுகாப்பும் குறைக்கப்பட்டுள்ளது. இருந்தாலும் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித பிரச்னையும் இல்லை. பாதுகாப்புக்கென இருப்பவர்கள் அப்பணியை சிறப்பாக செய்கின்றனர்.

நான் சுதந்திரக்கட்சி உறுப்பினர்தான். உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் தொடர்பில் இன்னும் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை-என்றார். (அ)

# கைத்தொலைபேசியொன்றை களவாடி காதலனுக்குப் பரிசளித்த காதலி கைது!

கொழும்பு, ஜன. 03

கைத்தொலைபேசியொன்றை களவாடி தனது காதலனுக்கு பரிசாக வழங்கிய பெண் ஒருவர் எதிர்வரும் 09 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா நீதிமன்றக் களஞ்சியசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பெறுமதிமிக்க கைத்தொலைபேசி ஒன்று காணாமல் போயுள்ளதாக நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய தொலைபேசி தரவுகளைச் சோதனையிட்ட பொலிஸாரால் காணாமல் போன தொலைபேசியை பயன் படுத்திய நபரை கண்டு பிடித்து அவரிடம் மேற் கொண்ட விசாரணையின் போது நீதிமன்ற களஞ்சிய சாலையில் பணி புரிந்த அவருடைய காதலி அதனை பரிசாக வழங்கியமை தெரியவந்துள்ளது.

அதற்கமைய சந்தேக நபரான பெண் கைது செய்யப்பட்டு நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்திய போது அவரை ஜனவரி மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா நீதவான் உத்தர விட்டுள்ளார். (அ)

# மது போதையில் வாகனங்களை செலுத்திய 509 சாரதிகள் கைது!

கொழும்பு, ஜன. 03

நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் (ஜனவரி மாதம் 01ஆம் திகதி காலை 06.00 மணி முதல் 02 ஆம் திகதி காலை 06.00 மணி வரை) மது போதையில் வாகனங்களை செலுத்தியதாக கூறப்படும் 509 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரைக்கு அமைய, நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே இந்த வாகன சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் 5,415 வாகன சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, மது போதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 509 சாரதிகளும், பாதுகாப்பற்ற முறையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 29 சாரதிகளும், அதிக வேகத்தில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 59 சாரதிகளும், சாரதி அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான குற்றங்கள் தொடர்பில் 345 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பில் 4,473 சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்க புதிய வேலைத்திட்டம்!

கொழும்பு, ஜன. 03

இந்த வருடம் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 3 மில்லியனாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் ருவன் சமிந்த ரணசிங்க தெரிவித்தார்.

அதற்கான திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவான மாதமாக இருந்தது.

233087 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அதிக சுற்றுலா பயணிகளின் வருகை பதிவாகியிருந்தது. அந்த எண்ணிக்கை 218,350 ஆகும்.

இதன்படி, புத்தாண்டில் இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 3 மில்லியன் வரை அதிகரிக்க புதிய வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் ருவன் சமிந்த ரணசிங்க தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40 ஆண்டுகளுக்குப் பிறகு பேருந்து சேவை ஆரம்பம்

## மாவலையாறு, மாவடிச்சேனை முதலான கிராமங்களின் ஊடாக 28 கி. மீ. பயணம்

மட்டக்களப்பு, ஜன.03

**கடந்த 40 வருடங்களுக்கு மேலாக போக்குவரத்து வசதியின்றி அவதியுற்ற மக்களுக்கான புதிய பேருந்து சேவை மட்டக்களப்பு, ஏறாவூர் இலங்கை போக்குவரத்து சபை சாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**




பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபுவின் வேண்டுகோளுக்கு அமைய இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பின்தங்கிய பிரதேசமான மாவலையாறு கிராமத்துக்கு செங்கலடி ஊடாக இந்த பஸ் சேவையை பாராளுமன்ற உறுப்பினர் பிரபு ஆரம்பித்து வைத்தார்.

இ. போ. ச. ஏறாவூர் சாலையின் முகாமையாளர் எம். எம். ஷைனி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இ. போ. ச. பிராந்திய முகாமையாளர் ஆர். எம். விஜித தர்மசேன உட்பட பலரும் கலந்துகொண்டனர்

செங்கலடியில் இருந்து காலை வேளையில் புறப்படும் இந்த பஸ் மாவலையாறு, மாவடிச்சேனை, சிவத்த பாலம் உட்பட பல கிராமங்களின் ஊடாக சுமார் 28 கிலோ மீற்றர் வரை பயணத்தை மேற்கொள்ளவுள்ளது.

சுமார் 40 வருடங்களுக்கு மேலாக பஸ் போக்குவரத்து வசதியின்றி பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வந்த நிலையில், இந்த பஸ் சேவையை ஆரம்பித்ததில் திருப்தியடைவதாக அப் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (எ)

# சந்தன மரம் போன்று சேவையாற்ற வேண்டும்

## மருத்துவர் சுகுணன் அறிவுரை



கல்முனை, ஜன.03

"தானும் மணம் வீசி பிரதே சத்துக்கும் வாசத்தை கொடுக் கும் சந்தன மரம் போன்று, நாமும் வாழ்ந்து மற்றவர்கள் மனதிலும் இடம்பிடிக்கும் செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்"- இவ்வாறு கல்முனை ஆதார மருத்துவமனையின் பணிப்பாளர், மருத்துவர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

கல்முனை ஆதார மருத்துவமனையில் கிளீன் சிறீலங்கா நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக 2025 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"மனம் போலவே வாழ்க்கை" என்பதற்கு ஏற்ப எமது செயல்பாடுகள் தூய்மையானதாகவும் தொலைநோக்குக் கொண்டதாகவும் மற்றவர்களை மதித்து, அவர்கள் இன்பு றம் விதத்திலும் அமைந்தால், வாழ்வில் நற்பயனை அடைய முடியும்.

சுகாதாரத் துறையை பொறுத்தமட்டில் நோயாளர்களுக்கு உதவுதல், அவர்களுக்கான சிறந்த சேவையை வழங்குதல் என்பன ஓர் ஆலய தொண்டிற்கும், பொதுத் தொண்டிற்கும், சமூகத் தொண்டிற்கும் சமனானது.

"கடமையே கண்கண்ட தெய்வம்" ஆகவே நாம் வெளியில் சென்று சமூக சேவையாற்றுவதை விட மேலான சேவை செய்யும் வாய்ப்பு இங்கே உள்ளது. இதுவும் ஒரு வரம்- என்றார். (எ)

# உள்ளூராட்சி ஆணையராக அஸ்மி நேற்று கடமையேற்பு



கல்முனை, ஜன.03

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக ஏ. எல். எம். அஸ்மி தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகரவால் உள்ளூராட்சி ஆணையாளராக அஸ்மி அண்மையில் நியமிக்கப்பட்டார்.


அஸ்மியின் சேவைத்தரம், தகுதி மற்றும் உள்ளூராட்சி நிர்வாகத்தில் ஒரு தசாப்தகால அனுபவம் என்பவற்றின் அடிப்படையிலும் உள்ளூராட்சி நிர்வாகத்தின் வளர்ச்சிக்கு வழங்கிவந்த தலைமைத்துவ வழிகாட்டுதல்கள், நிர்வாக மற்றும் முகாமைத் துவ செயல்பாட்டு திறமைகள் என்பவற்றை கருத்தில் கொண்டே இந்த நியமனம் வழங்கப்பட்டடது. (எ)

# முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் கடமை ஆரம்பம்

கல்முனை, ஜன. 03

கிளீன் சிறீலங்கா தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்ததாக 2025 ஆம் ஆண்டில் அரச கடமைகளை ஆரம்பம் செய்யும் அரசாங்க சேவை சத்தியப் பிரமாண நிகழ்வு திணைக்கள வளாகத்தில் பணிப்பாளர் எம். எஸ். எம். நவாஸ் தலைமையில் நடைபெற்றது.

சமூக நல்லிணக்கம், ஒற்றுமை, தேசிய நலன், அபிவிருத்தி, முன்மாதிரியாகச் செயல்படல் மற்றும் கூட்டுப் பொறுப்பு என்பனவற்றினூடாக மாற்றத்தை ஏற்படுத்தல் போன்ற நோக்கத்தை மையப்ப டுத்தி அரச கடமைகள் ஆரம்ப நாள் நிகழ்வு அமையப் பெற்றது. (எ)



# தம்பலகாமத்தில் உலர் உணர்வு நிவாரணப் பொதிகள் வழங்கல்

தம்பலகாமம், ஜன.03

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு உலர் உணவு நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன.

சமூக சேவையாளரும் ஆதில் ஜூவல்லரி உரிமையாளருமான ஏ. எச். மாகினான், திருகோண மலை, தம்பலகாமம் - முள்ளிப் பொத்தானை ஹமீதியா நகர் மக்களுக்கு நிவாரணப் பொதி களை வழங்கினார்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சுமார் 75 குடும்பங்க ளுக்கு இவ்வாறு நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டன. (எ)



# பதில் அரச அதிபராக சுதாகரன் நியமனம்

திருகோணமலை, ஜன.03

திருகோணமலை மாவட்டத்தின் பதில் அரசாங்க அதிபராக எஸ். சுதாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை மாவட்ட அரச அதிபராக கடமையாற்றிய சாமிந்த ஹெட்டியாராச்சி ஒய்வூதிய திணைக்களத்தின் பணிப்பாளராக நியமனம் பெற்றுச் சென்றுள்ளார்.

இந்த நிலையில், திருகோணமலை மாவட்ட செயலகத்தில் மேலதிக மாவட்ட செயலாளராக கடமையாற்றி வந்த சுதாகரன், பதில் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.



இவர் நேற்று முன்தினம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது இவர் திருகோணமலை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளராகவும் பதில் கடமையாற்றி வருகின்றார். (எ)



புதிய வருடத்தின் முதல் நாள் கடமையை ஆரம்பிக்கும் நிகழ்வு தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு கொண்டாட்ட கூட்டத்துக்குள் அதிவேகமாக நுழைந்தது சொகுசு கார்!

## அமெரிக்காவில் 15 பேர் பலியான சோகம்

வாஷிங்டன், ஜன.03


**புத்தாண்டு கொண்டாட்ட கூட்டத்துக்குள் அதிவேகமாக நுழைந்த சொகுசு கார் மோதியதில் 15 பேர் பலியாகினர். இந்தச் சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் உள்ள நியூ ஓர் லேன்ஸ் நகரில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் கோலா கலமாக நடைபெற்று வந்தன.

அப்போது திடீரென யாரும் எதிர்பாராத விதமாக அந்த கூட்டத்துக்குள் அதிவேகத்தில் ஒரு கார் புகுந்து அங்கிருந்தவர் கள் மீது பலமாக மோதியது. இந்த சம்பவத்தில் சிக்கி 15 பேர் பலியாகினர். மேலும், 30 இற் கும் மேற்பட்டோர் காயம டைந்தனர்.

இதனிடையே வேகமாக கூட்டத்தில் மோதிய காரின் சாரதி, திடீரென தனது துப் பாக்கியால் அங்கிருந்தவர்களை நோக்கி சுடத்தொடங்கியதாக தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நியூ ஓர்லேன்ஸ் பொலிஸார் கூறுகையில், "முதற்கட்ட விசா ரணையின்படி மக்கள் கூட்டத் தின் மீது கார் மோதியிருக்க லாம்.



காயங்கள் தற்போது உறு திப்படுத்தப்படாத நிலையில், இறப்புகள் அதிகமாக பதிவா கின"- என்றனர். (எ)

## வெப்பமான ஆண்டு 2024

புதுடில்லி, ஜன.03

1901 ஆம் ஆண்டுக்குப் பின் னர் இந்தியாவில் மிக வெப்ப மான ஆண்டு 2024 தான். அந்த வகையில் கடந்த 123 ஆண்டுக ளில் இல்லாத அளவுக்கு 2024 இல் அதிக வெப்பம் பதிவாகி யுள்ளது என இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

2024ஆம் ஆண்டில் இந் தியா முழுவதும் சராசரியாக தரைக்காற்றின் வெப்பநிலை என்பது நீண்டகால சராசரியை விட அதிகமாகப் பதிவானது. இது கடந்த 1901 - 2020 கால கட்டத்தில் பதிவானதை விட 0. 65 டிகிரி செல்சியஸ் அதிக மாக இருந்தது.

மேலும், நாட்டின் பெரும் பாலான பகுதிகளில் இம்மாதம் இயல்பைவிட கூடுதலாக வெப் பநிலை நிலவும் என்றும் இந் திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. (எ)

# எல்லாம் சரியாகிவிடும் நாம் முன்னேறுவோம்

## ரஷ்ய மக்களுக்கு புடின் புத்தாண்டு வாழ்த்து

மொஸ்கோ, ஜன.03

"இந்த புத்தாண்டில், நாம் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக் கிறோம். எல்லாம் சரியாகிவி டும் என்று நம்பிக்கையுடன் இருக்கிறோம், நாம் முன்னேறு வோம்"- இவ்வாறு ரஷ்ய ஜனா திபதி விளாடிமிர் புடின் தெரி வித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்ய இரா ணுவம் கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தாக் குதலை தொடங்கியது. ரஷ்யா வின் தாக்குதலை மேற்கத்திய நாடுகளின் பொருளாதார மற்றும் இராணுவ உதவியுடன் உக்ரைன் எதிர்த்து வருகிறது.

இந்த நிலையில், ரஷ்யாவில் பொருளாதார நெருக்கடி ஏற் படும் சூழல் உருவாகியுள்ளது. விலைவாசி உயர்வு மற்றும் ரஷ்ய மத்திய வங்கியின் 21 வீத வட்டி விகித அமுலாக்கம் என்பன அந்த நாட்டு மக்களை கவலையடையச் செய்துள்ளது.



இந்தச் சூழலில், 2025 புத்தாண்டையொட்டி ரஷ்ய மக்களுக்கு அந்த நாட்டு ஜனாதிபதி புடின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், "நாம் எதிர்காலத் தைப் பற்றி சிந்திக்கிறோம். எல் லாம் சரியாகிவிடும் என்று நம் பிக்கையுடன் இருக்கிறோம், நாம் முன்னேறுவோம்.

ரஷ்ய மக்களின் நல்வாழ்வு என்பதே நமது முன்னுரிமை"- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# தாக்குதல் நடத்திய கார் சாரதிக்கு ஐ. எஸ். ஐ. எஸ்ஸுடன் தொடர்பு!

## முதற்கட்ட விசாரணையில் தகவல்

வாஷிங்டன், ஜன. 03

அமெரிக்காவின் நியூ ஓர் லேன்ஸில் மக்கள் கூட்டத்துக் குள் சொகுசு கார் பாய்ந்த சம்பவத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15 ஆக அதிகரித்த நிலையில், இந்தக் கார் சார திக்கு ஐ. எஸ். ஐ. எஸ். பயங்க ரவாத அமைப்புடன் தொடர்பு இருப்பது முதற்கட்ட விசார ணையில் உறுதியாகியுள்ளது. (எ)

# சிம்பாவேயில் மரண தண்டனை இரத்து

ஹராரே, ஜன.03

சிம்பாவேயில் மரண தண்ட னையை இரத்து செய்வதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டுள் ளது.

ஆபிரிக்க நாடான சிம்பா வேயில் பல ஆண்டுகளாகவே மரண தண்டனைக்கு எதிராக தீவிர பிரசாரம் முன்னெடுக்கப் பட்டு வந்தது.

இந்த நிலையில் அந்த நாட் டில் மரண தண்டனையை இரத்து செய்வதற்கான சட்ட திருத்தம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. பாராளுமன்றத்தின் இரு அவை களிலும் இந்த சட்ட திருத்தம் ஒரு மனதாக நிறைவேறியது.

இதையடுத்து, மரண தண் டனை இரத்து செய்யும் சட்டத் துக்கு ஜனாதிபதி எம்மர்சன் மனங்காக்வா ஒப்புதல் வழங்கி யுள்ளார்.

இதன் மூலம் சிம்பா வேயில் மரண தண்டனை இரத்து செய்யப்பட்டுள்ளது. (எ)

## புதிய சுற்றுலா வரி ரஷ்யாவில் அமுல்

மொஸ்கோ, ஜன.03

ரஷ்யாவில் புதிய சுற்றுலா வரி நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.

ரஷ்யாவில் சுற்றுலா துறையை கட்டமைக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக சுற்றுலாப் பயணிகள் தங்கும் ஹோட்டல்கள் மற்றும் பிற தங்கும் விடுதிகளில் அவர் கள் தங்குவதற்காக கூடுதலாக ஒரு சதவீத வரி விதிக்கப்படும்.

2024ஆம் ஆண்டு ஜூலை யில் ரஷ்ய வரி குறியீட்டில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத் தங்களின் ஒரு பகுதியாக இந்த வரி அறிமுகப்படுத்தப்பட்டுள் ளது. சுற்றுலா தொழில்சாலைக ளாக வளர்ந்து வரும் அல்லது முன்பே வளர்ந்த பல பகுதிக ளில் இந்த நடைமுறை முன்பே கொண்டு வரப்பட்டு விட்டது.

இதன்படி, சுற்றுலா கட்ட மைப்பை மண்டல ரீதியாக வளர்க்கும் திட்ட தொடக்கத் தின்படி, 2025ஆம் ஆண்டில் ஒரு சதவீதம் என்ற விகிதத்தில் சுற்றுலா வரி விதிப்பு தொடங் கும். இது தொடர்ந்து அதிக ரித்து, 2027ஆம் ஆண்டில் 3 சத வீதம் என்ற அளவுக்கு உயரும். (எ)

# புத்தாண்டு தினத்தன்றும் இஸ்ரேல் கடும் தாக்குதல்


## காஸாவில் 12 பலஸ்தீனர்கள் பலி!


காஸா, ஜன.03

புத்தாண்டு தினத்தன்று காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 12 பலஸ்தீனியர் கள் உயிரிழந்ததாக காஸாவின் சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது. உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் குழந்தைகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு காஸாவின் ஜபா லியா பகுதியில் உள்ள ஒரு வீட்டின்மீது இஸ்ரேல் நடத் திய தாக்குதலில் ஒரு பெண் மற்றும் 4 குழந்தைகள் உட்பட 7 பேர் கொல்லப்பட்டனர். மத்திய காஸாவில் உள்ள புரேஜ் அருகே உள்ள அகதிகள் முகாமில் நடந்த மற்றொரு தாக்குதலில் ஒரு பெண் மற்றும் ஒரு குழந்தை கொல்லப்பட்டனர். அதேபோன்று, தெற்கு நகரமான கான் யூனிஸில் நடந்த தாக்குத லில் 3 பேர் கொல்லப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# 5 கிலோ நகைகள் அணிந்து திருப்பதிக்கு வந்த பக்தர்





திருமலை, ஜன.03

புத்தாண்டையொட்டி திருப்பதி ஏழுமலையான் கோவிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. இதனால், இலவச தரிசனம் வாயிலாக சுவாமியை தரிசிக்க 14 மணி நேரம் வரை பக்தர்கள் காத்தி ருந்தனர்.

இந்த நிலையில், ஹைதரா பாத்தைச் சேர்ந்த தெலுங்கானா ஒலிம்பிக் சங்க துணைச் செய லாளர் விஜய குமார், 5 கிலோ நிறையில் தங்க நகைகளை அணிந்து ஏழுமலையானை தரிசித்தார். இவரை பக்தர்கள் ஆச்சரியத்துடன் பார்த்தனர். (எ)

# முகத்தை மறைக்கும் ஆடை அணியத் தடை

பெர்ன், ஜன.03

சுவிட்சர்லாந்தில் பொது வெளியில் முகத்தை மறைக்கும் வகையிலான ஆடை அணிய தடை விதிக்கும் சட்டம் அமு லுக்கு வந்துள்ளது.

இந்தச் சட்டம் 2025 ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது.இதன்படி, அந்த நாட்டு பணத் தில் 100 பிரன் சிஸ் (இலங்கை மதிப்பில் சுமார் 32 ஆயிரம் ரூபாய்) அபராதம் விதிக்கப்ப டும். அபராத தொகையை உடனடியாக செலுத்தவில்லை யென்றால் 1000 பிரன்சிஸ் (இலங்கை மதிப்பில் சுமார் மூன்றரை இலட்சம் ரூபாய்) அபராதம் விதிக்கப்படும்.

அதேவேளை, விமானங்கள், தூதரகங்கள், மதவழிபாட்டு தலங்கள், முகத்தை மறைக்கா விட்டால் உடல்நல ரீதியில் பிரச்னைகள் ஏற்படும் பகுதிக ளில் இந்தச் சட்டம் பொருந்தாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குசல் பெரேரா அதிரடி சதம்

# இமாலய இலக்கை நிர்ணயித்து இலங்கை அணி ஆறுதல் வெற்றி

## நியூசிலாந்து அணி வசமானது ரி - 20 தொடர்




வெலிங்டன், ஜன.03


நியூசிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது ரி - 20 போட்டியில் 219 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கை நிர்ணயித்த போதும் வெறும் 7 ஓட்டங்களில் தான் இலங்கை அணி வெற்றி பெற்றது.

இலங்கை கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடியது. இதில் முதலில் நடைபெற்ற 2 போட்டிகளின் முடிவிலேயே நியூசிலாந்து 2 - 0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி விட்டது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி போட்டி நேற்று நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து பந்துவீச்சை தெரிவு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 218 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக குசல் பெரேரா 101 ஓட்டங்கள் அடித்தார்.

இதனையடுத்து 219 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி களமிறங்கிய நியூசிலாந்து அணியும் ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடியது. ரச்சின் ரவீந்திரா - ரிம் ரொபின்சன் முதல் விக்கெட்டுக்கு 7. 2 ஓவர்களில் 81 ஓட்டங்கள் அடித்து வலுவான அடித்தளம் அமைத்து கொடுத்தனர். ரிம் ரொபின்சன் 37 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அவரைத் தொடர்ந்து களமிறங்கிய மார்க் சப்மேன் (9 ஓட்டங்கள்), பிலிப்ஸ் (6 ஓட்டங்கள்) சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

பின்னர் ரச்சின் ரவீந்திராவுடன் கை கோர்த்து டேரில் மிட்செலும் அதிரடியாக விளையாட நியூசிலாந்து இலக்கை நோக்கி வெகுவாக முன்னேறியது. ஆனால்,



இந்த ஜோடி பிரிந்ததும் வெற்றி இலங்கை பக்கம் திரும்பியது. ரச்சின் ரவீந்திரா 69 ஓட்டங்களிலும், டேரில் மிட்செல் 35 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இறுதி கட்டத்தில் சக்காரி பவுல்க்ஸ் (21 ஓட்டங்கள்) போராடியும் பலனில்லை.

நியூசிலாந்து 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்களை இழந்து 211 ஓட்டங்கள் மட்டுமே அடித்தது. இதன் மூலம் 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை ஆறுதல் வெற்றி பெற்றது.

இலங்கை தரப்பில் சரித் அசலங்க 3 விக்கெட்களும், வனிந்து ஹசரங்க 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரை நியூசிலாந்து 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.

குசல் பெரேரா ஆட்டநாயகனாகவும், நியூசி லாந்து வீரர் ஜேக்கப் டபி தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

# தொடர் தோல்விகள் தொடர்பில் ரோஹித், கம்பீரிடம் விசாரணை

மும்பை, ஜன.03

தொடர் தோல்விகள், அஸ்வின் திடீர் ஓய்வு சர்ச்சை குறித்து ரோஹித், கம்பீரிடம் விசாரணை நடத்த பி. சி. சி. ஐ முடிவு செய்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி தற்போது அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் 4 போட்டிகளின் முடிவில் அவுஸ்திரேலியா 2-1 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இதனையடுத்து தொடரின் முடிவை தீர்மானிக்கும் 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் இன்று தொடங்குகிறது.

இதில் வெற்றி பெற்றால் மட்டுமே பார்டர் - கவாஸ்கர் கிண்ணத்தை தக்கவைக்க முடியும் என்ற சூழலில் இந்தியா விளையாடவுள்ளது. மேலும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டி வாய்ப்பில் நீடிக்க இந்தப் போட்டியில் இந்திய அணி கட்டாயம் வெற்றி பெற்றாக வேண்டும். எனவே, இந்த போட்டி இந்திய அணிக்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

முன்னதாக தொடரில் இடம்பெற்றிருந்த முன்னணி சுழற்பந்து வீச்சாளரான அஸ்வின் 3ஆவது போட்டியின் முடிவில் ஓய்வு அறிவித்தது அனைவருக்கும் அதிர்ச்சியாக இருந்தது. அவரது ஓய்விற்கு தலைமை பயிற்சியாளர் கம்பீர்தான் காரணம் என்று சர்ச்சைகள் எழுந்தன. மேலும், ராகுல் ட்ராவிட்டு பின் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்ற கம்பீரின் தலைமையில் இந்திய அணி தொடர் தோல்விகளை சந்தித்து வருகிறது. இவரது தலைமையில் இந்தியா, இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடர் தோல்வி, சொந்த மண்ணில் நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் (0-3) தோல்வி. தற்போது பார்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரிலும் தடுமாறி வருகிறது. இதனால் இவர் மீது பல தரப்பினர் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

மறுபுறம் டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து சொதப்பி வரும் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா மீதும் பெரிய அளவில் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்த நிலையில் பார்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடர் முடிந்ததும் தொடர் தோல்விகள் மற்றும் அஸ்வினின் திடீர் ஓய்வு குறித்து ரோஹித் மற்றும் கம்பீரிடம் விசாரணை நடத்த பி. சி. சி. ஐ. முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ)

# தலைவர் பொறுப்பிலிருந்து ஷாண்டோ திடீர் விலகல்



டாக்கா, ஜன.03

பங்களாதேஷ் ரி - 20 அணித் தலைவர் பொறுப்பிலிருந்து நஜ்மூல் ஷாண்டோ திடீரென விலகியுள்ளார்.

இதனை பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

ஷாண்டோ, பங்களாதேஷின் 3 வடிவிலான (டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி -20) கிரிக்கெட் அணிகளுக்கும் தலைவராக இருந்தார். முன்னதாக 3 வடிவிலான அணிகளின் தலைவர் பொறுப்பிலிருந்தும் ஷாண்டோ விலக முடிவு செய்திருந்ததாக கூறப்பட்டது. ஆனால், தற்போது ரி - 20 அணியிலிருந்து மட்டும் அவர் விலகியுள்ளார். இதனால் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளுக்கான அணித் தலைவராக அவர் தொடர்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மிட்செல் மார்ஷ் நீக்கம்

சிட்னி, ஜன.03

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் இன்று தொடங்குகிறது.

இந்த நிலையில் இந்த போட்டிக்கான அவுஸ்திரேலியாவின் ஆடும் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் மிட்செல் மார்ஷ் நீக்கப்பட்டு அவருக்கு பதிலாக, பியூ வெப்ஸ்டர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஆஸி அணி வருமாறு,

கம்மின்ஸ் (தலைவர்), சாம் கான்ஸ்டாஸ், உஸ்மான் கவாஜா, மார்னஸ் லபுஸ்சேன், ட்ராவிஸ் ஹெட், பியூ வெப்ஸ்டர், ஸ்டீவ் சுமித், அலெக்ஸ் ஹெரி, ஸ்டார்க், ஸ்காட் போலன்ட், நாதன் லயன் ஆகியோர் விளையாடவுள்ளனர். (எ)

# இந்திய -ஆஸி அணிகள் மோதும் கடைசி டெஸ்ட் இன்று ஆரம்பம்

சிட்னி, ஜன. 03

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான கடைசி டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பிக்கவுள்ளது.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட "பார்டர்- கவாஸ்கர்" கிண்ண டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலாவது டெஸ்டில் இந்தியாவும், 2ஆவது டெஸ்டில் அவுஸ்திரேலியாவும் வெற்றி பெற்றன. 3ஆவது டெஸ்ட் மழையால் சமனில் முடிந்தது. மெல்பேர்ணில் நடந்த 4ஆவது டெஸ்டில் அவுஸ்திரேலியா 184 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவை தோற்கடித்து தொடரில் 2 - 1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் இன்று தொடங்குகிறது.

இந்த நிலையில் இந்த போட்டிக்கு முன்னதாக செய்தியாளர்கள் சந்திப்பு நேற்று நடைபெற்றது. இதில் இந்திய அணி சார்பில் பயிற்சியாளர் கௌதம் கம்பீர் கலந்துகொண்டார். அதில் அவரிடம், இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா இந்தப் போட்டியில் விளையாடுவாரா என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த கம்பீர், "சிட்னி மைதானத்தை பார்த்த பின்னரே விளையாடவுள்ள வீரர்களை நாங்கள் தெரிவு செய்வோம்"- என்றார். (எ)

# இந்திய அணியிலிருந்து ரிஷப் பண்ட் நீக்கம்?

புதுடில்லி, ஜன.03

இந்திய அணியிலிருந்து ரிஷப் பண்ட் நீக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அவருக்கு பதிலாக இளம் வீரர் துருவ் ஜூரெல் அணியில் சேர்க்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளான.நடப்பு பார்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரில் பெரிய அளவில் செயல்பாட்டை வெளிப்படுத்தாத ரிஷப் பண்ட் வெறும் 154 ஓட்டங்கள் (7 இன்னிங்ஸ்கள்) மட்டுமே அடித்துள்ளார். மேலும், முக்கியமான தரு ணங்களில் விக்கெட்டை பறிகொடுத்து வருகிறார் என விமர்சனங்கள் எழுந்துள்ளன. இதன் காரணமாக அவர் அணியிலிருந்து நீக்கப்படவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்...

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் மத தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர்.

நீண்ட காலமாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி சேகரிக்கப்படும் குறித்த கையெழுத்துக்கள் மகஜராக ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அநுர...

இருப்பதாக கூறியிருந்தார்.

ஜனாதிபதி இந்திய பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியதும், கின் தலைமையிலான சீனக் குழுவினர் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியை சந்தித்தனர். அங்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் விசேட செய்தியொன்றையும் கின் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதிக்கு மரியாதை செலுத்தும் வகையில், ஜனாதிபதி தமது சீனப் பயணத்தின்போது விரும்பும் எந்தவொரு புதிய திட்டத்தையும் முன்வைக்க முடியும் எனவும், அதனை நடைமுறைப்படுத்த சீன அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அந்தச் செய்தியில் கூறியுள்ளார்.

இதுவரை எந்தவொரு ஜனாதிபதியும் பெற்றுக் கொள்ளாத தனித்துவமான இந்த யோசனையை சீனா ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் முன்வைத்துள்ள நிலையில், கடந்த சில நாட்களாக சீனப் பயணத்தின்போது முன்வைக்கப்படவுள்ள திட்ட முன் மொழிவு தொடர்பில் அரசாங்கத் திற்குள் விசேட கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும், கடவத்தைக்கும் மீரிகமவுக்கும் இடையில் தற்போது ஸ்தம்பிதமடைந்துள்ள மத்திய அதிவேக வீதியின் எஞ்சிய பகுதியை மீள ஆரம்பிப்பது தொடர்பில் ஜனாதிபதியின் சீன பயணத்தில்போது இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இப்பிரிவுக்குப் பொறுப்பான சீன நிறுவனத்துக்கு அரசு பெருமளவு இழப்பீடு வழங்க வேண்டியுள்ளதால் அந்தப் பணி முடங்கியுள்ளது.

எவ்வாறாயினும், இது தொடர்பில் சீனாவிடமிருந்து அரசாங்கத்துக்கு மகிழ்ச்சியான செய்தி கிடைத்துள்ளதாகவும் இதன்மூலம் இழப்பீட்டுத் தொகையை முற்றாக இடைநிறுத்த அல்லது இழப்பீட்டுத் தொகையை கணிசமான அளவு குறைத்து கடவத்தை - மீரிகம அதிவேக வீதியின் எஞ்சிய பகுதியை நிர்மாணிப்பதற்கு சீனா இணங்கியுள்ளதாக தெரியவருகிறது.

மேலும், பொருளாதார நெருக்கடி காரணமாக கைவிடப்பட்ட கண்டி வரையிலான மத்திய அதிவேக பாதையின் முழுப் பகுதியையும் நிர்மாணிப்பது குறித்தும் சீனா அரசாங்கத்துடன் இலங்கை அரசாங்கம் கலந்துரையாடியுள்ளது. ஜனாதிபதியின் சீன பயணத்தில் மத்திய அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப் பணிகள் தொடர்பில் சாதகமான பதில் சீனாவிடமிருந்து கிடைக்கும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

மேலும், அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அருகில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அமைக்கும் சீனாவின் திட்டம், ஹம்பாந்தோட்டையில் கைத்தொழில் வலயத்தை நிறுவுவதற்கான சீனா முன்மொழிந்துள்ள திட்டம் குறித்தும் இந்தப் பயணத்தில் கலந்துரையாடப்படும் எனவும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## நெருக்கடி...

குடும்பமாக உழைக்கும்போது குடும்ப முன்னேற்றத்துக்காக சில முடிவுகளை எடுக்கவேண்டும். அவ்வாறுதான் நாட்டுக்காக சில முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது.

ஆனால், அந்த முடிவுகள் குடும்ப நலனுக்காகப் போன்று இவை நாட்டு நலனுக்காக எடுக்கப்பட வேண்டும். இதனை அனைவரும் புரிந்து கொள்வார்கள் - என்றார். (அ)

## புளியம்பொக்கணை...

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதவான் ஸ்மாத் ஜெமில் பார்வையிட்டதுடன், உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை செல்லும் நோக்குடன், ஏ-35 வீதியால் பயணித்த இளைஞர்கள், புனரமைப்பு பணிகள் இடைநிறுத்தப்பட்ட பாலத்தின் உட்பகுதியில் விழுந்ததன் காரணமாக உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் தரும்புரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்

சடலமாக மீட்கப்பட்டவர்கள், ஜெய்க்கா வீட்டுத்திட்டம் இக்பால் நகர் நிலாவளியைச் சேர்ந்த 23 வயதுடைய அன்ரன் சாந்தன் மற்றும் 21 வயதுடைய சசிகரன் சிம்புரதன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

புளியம்பொக்கணை 10ஆம் கட்டை பாலத்தின் புனரமைப்புப் பணிகள் கைவிடப்பட்டு காணப்படும் நிலையில் அடிக்கடி இப்பகுதியில் விபத்துக்கள் ஏற்பட்டு இது போன்ற உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

## வன்னி...

முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் காணப்படு கின்ற ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும், மேலதிகமாக உள்ள ஆசிரியர்களின் தரவுகளையும் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இதன்போது கோரினார்.

சில மாவட்டங்களில் ஆசிரியர்கள், மேலதிகமாகவும், சில மாவட்டங்களில் ஆசிரியர்கள் வெற்றிடமாகவும் இருப்பதற்கான காரணமென்ன என கேள்வி எழுப்பிய ரவிகரன், இது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளாமலிருப்பது ஏன் எனவும் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த வடமாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் வே.ஆயகுலன்,

புதிய ஆசிரியர் நியமனங்களை வன்னிப் பகுதிகளுக்கு வழங்கி வருவதாகவும் யாழ். மாவட்ட ஆசிரியர்கள் வெளி மாவட்ட சேவைக்காலம் எட்டு வருடங்கள் முடிவுற்றவுடன், தமது இடங்களுக்கு இடமாற்றம் கோரியதனாலேயே யாழ். மாவட்டத்தில் மேலதிகமான ஆசிரியர் தொகை காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

இருப்பினும் ஆசிரியர் நியமனங்களை பகிர்ந்தளிக்கின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட ரவிகரன் எம்.பி, வன்னிப் பகுதிக்கு கணிதப் பிரிவு, உயிரியல் பிரிவுகளுக்குக்கூட வெற்றிடங்கள் காணப்படுவதாக தெரிவித்தார்.

இதன்போது வடமாகாண பிரதிப் பிரதமசெயலாளர் திருமதி.எ.அன்ரன் யோகநாயகம் பதிலளிக்கையில்,

மிக விரைவில் ஆசிரியர் சங்கங்களுடனும் கலந்துரையாடி, ஏற்கனவே நிபந்தனை அடிப்படையில் வழங்கப்பட்ட இடமாற்றங்கள் தொடர்பிலும் தீர்மானங்களை மேற்கொண்டு, பொதுவாக அனைத்து மாவட்டங்களும் பயன்பெறக்கூடிய வகையில் ஒரு இடமாற்றக் கொள்கையை வகுத்து அதற்கான அனுமதியைப் பெற்று அதை நடைமுறைப்படுத்துவோம் எனத் தெரிவித்தார். (அ)

# கிளிநொச்சி விபத்து: தாயும் உயிரிழந்தார்!

கிளிநொச்சி, ஜன. 02

கிளிநொச்சியில் இடம்பெற்ற டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பப் பெண் நேற்று உயிரிழந்துள்ளார். இதன்போது அன்னை இல்ல வீதி, கனகாம்பிகை குளம் பகுதியைச் சேர்ந்த கஜன் சாளினி (வயது 34) என்ற இளம் குடும்பப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த நத்தார் தினத்தன்று கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் இரண்டு பிள்ளைகள் நால்வர் படுகாயமடைந்தனர். பின்னர் அவர்களை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்தவேளை இரண்டு வயது குழந்தை உயிரிழந்தது.

இந்நிலையில் கணவனும், மனைவியும் ஒரு பிள்ளையும் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தனர். மேலதிக சிகிச்சைக்காக மனைவியை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றி அங்கு சிகிச்சை பெற்று வந்தநிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார். (அ-5)

## காரைநகர்...

புனரமைப்புக்காக நடவடிக்கை களைப் பூர்த்தி செய்தல், தேவையான இயந்திர உபகரணங்கள் மற்றும் அலுவ லக உபகரணங்களை பெறுகை செய்தல் போன்றவற்றுக்காக நிதியொதுக்கீடுகளை வழங்குவதற்கு இந்திய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

படகு கட்டுமானத் தளம் புனரமைக்கப்பட்டதும் உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதார வாய்ப்புகளைப் பெருக்கவும் படகுத் தளத்தைச் சுற்றியுள்ள சிறிய நிறுவனங்கள் உட்பட அப்பகுதியில் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் மேலும் தரமான மீன்வளப் பொருட்களின் விநியோகத்தை மேம்படுத்தவும் உதவும். (அ)

## இந்திய...

உத்தரவிட்டுள்ளார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 11ஆம் திகதி, பருத்தித்துறைக் கடற்பரப்பில், எல்லை தாண்டி மீன்பிடித்துக் கொண்டிருந்த 12 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, பருத்தித்துறை நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைதான மீனவர்கள் நவம்பர் 13ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் நீரியல் வளத் துறை அதிகாரிகளினால் முற்படுத்தப்பட்டு, நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

கைது நடவடிக்கையின்போது, கடற்படை அதிகாரிகளைத் தாக்கி கடமைகளுக்கு இடையூறு விளை வித்தமை மற்றும் படகிற்கு சேதம் ஏற்படுத்தியிருந்தமை தொடர்பில் கடற்படையினரால், பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில், பிறிதொரு முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டது.

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நீரியல்வளத் திணைக்களத்தினரால் தொடரப்பட்ட வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட இந்திய மீனவர்கள், கடந்த நவம்பர் 27ஆம் திகதி 12 இந்திய மீனவர்களும் நிபந்தனையுடன் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

ஆனாலும் கடற்படையினரைத் தாக்கியமை தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாரால் தொடரப்பட்ட பிறிதொரு வழக்கில் மீனவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

குறித்த வழக்கு நேற்று முன் தினம் பருத்தித்துறை நீதிமன்றில் நீதவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது மீனவர்கள் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

ஆகவே இந்திய மீனவர்கள் மீதான குற்றப் பத்திரத்தை தாக்கல் செய்யுமாறு நீதவான் பருத்தித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன் எதிர்வரும் 8ஆம் திகதி வரை மீனவர்களை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.(அ)

## பாடசாலை...

காகிதங்களுக்கு 18 வீத வற் மற்றும் 2.5 சதவீத சமூக பாதுகாப்பு வரி இருப்பதாகவும், இந்த இரண்டு வரிகளையும் நீக்கினால், பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களின் விலையை மேலும் குறைக்க முடியும் என்றும் சங்கத்தின் தலைவர் நிருக்ஷ குமார தெரிவித்தார்.

புதிய கல்வியாண்டு ஆரம்பமாகியுள்ள நிலையில், பாடசாலை உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்களை பெற்றோர்கள் குறைந்த விலையில் கொள்வனவு செய்யும் வாய்ப்புள்ளதாகவும், பாடசாலை ஆடைகளின் விலை கூட 20 ஆக குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## சுகாதாரத்...

சிகிச்சைப் பிரிவு நேற்று சுகாதார அமைச்சர் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது.

ருஹூணு மகாவிகாரையின் நிதி உதவியில் விமானப்படையினரின் முழுமையான ஒத்துழைப்புடனேயே இந்த கட்டடத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த பிரிவினுள் ஒரே தடவையில் 4 பேர் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியும்.

இதன் போது உரையாற்றிய சுகதாதாரத்துறை அமைச்சர் ,

சுகாதாரத்துறை என்பது நிதி கோரப்படும் பட்சத்தில் உடனடியாக எந்த அரசாங்கமும் நிதியை விடுவிக்கும் துறையாகும். இந்த துறைக்காக பெருமளவிலான நிதி ஒவ்வொரு வருடமும் ஒதுக்கப்படுகின்றது.அந்த வகையில் எந்த வருடமும் முன்னெப் போதும் இல்லாத வகையில் அதிகளவு நிதியை சுகாதார துறைக்கு ஒதுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அரசியல் நோக்கங்களுக்காக சுகாதார துறைக்குள் எந்த நடவடிக்கைகளையும் முன்னெடுக்க முடியாது. மாறாக எதிர்வரும் 20 வருடங்கள் தொடர்பில் ஆராய்ந்து தேசிய வேலைத் திட்டத்திற்கு அமையவே அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ)

## அரிசிக்கான...

நடைபெற்ற ஊடகச்சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதன் ஊடாக கடந்த காலத்தில் நாட்டில் அரிசிக்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு நீங்கும். அரசாங்கம் இறக்குமதி செய்த 5200 மெற்றிக் தொன் அரிசியின் முதல் தொகுதி கடந்த 30ஆம் திகதி எமக்கு கிடைக்கப்பெற்றது. அதனை பகிர்ந்தளிக்கும் பணிகளும் இடம்பெறுகின்றன. இரண்டாம் கட்டமாக 520 மெற்றிக் தொன் எமது கூட்டுத்தாபனத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. அதனை பகிர்ந்தளித்து வருகிறோம்.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசியை நான்கு கட்டங்களாக விநியோகித்துள்ளோம். மேலும் 5200 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்யும் அனுமதியையும் நிறுவனமொன்றுக்கு வழங்கியுள்ளோம். எதிர்வரும் 7ஆம் திகதி குறித்த தொகை எமக்கு கிடைக்கப் பெறும். 7ஆம் திகதியின் பின்னர் அரிசிக்கான தட்டுப்பாடு படிப்படியாக நீங்கும் - என்றார் (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu



# நேபாள பிரதமரை சந்தித்தார் ரணில்

கொழும்பு, ஜன. 03

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேபாள பிரதமர் கே.பி.சர்மா ஒலியை நேற்று பலுவத்தாரில் உள்ள பிரதமரின் இல்லத்தில் சந்தித்துள்ளார்.

இருதரப்பு உறவுகளை மேம்படுத்துதல் மற்றும் இரு தெற்காசிய நாடுகளின் பரஸ்பர நலன்களின் பல்வேறு அம்சங்கள் குறித்து கலந்துரையாடல் இடம்பெற்றது.

நேபாளி காங்கிரஸின் சட்டமன்ற உறுப்பினரான தொழிலதிபர் பினோத் சவுத்ரியும் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

பிரதமர் ஒலியின் நீண்டகால நண்பரான விக்கிரம சிங்க, டிசம்பர் 28ஆம் திகதி தனிப்பட்ட விஜயமாக நேபாளம் சென்றிருந்தார். (அ)

# அரசின் செயல்பாடுகளில் திருப்திகொள்ள முடியாது!

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜனவரி 03

**அரசாங்கத்தின் செயற்பாடுகளில் திருப்திகொள்ள முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட் டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க பதவியேற்று நூறு நாட்கள் கடந்துள்ளன. எனினும் அரசாங்கத் தின் செயற்பாடுகளில் திருப்தி கொள்ள முடியாதுள்ளது.

ஏனென்றால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் எந்தவொரு காத்திரமான திட்டமும் முன்னெ டுக்கப்படவில்லை.

ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் நோக்கில் பல்வேறு உறுதிமொழி கள் வழங்கப்பட்டன. ஆயினும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப் பந்தம் அவ்வாறே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

பொருட்களை விலைகளை குறைப்பதாகவும் மக்களுக்கு நிவார ணம் வழங்குவதாகவும் கூறிய உறுதிமொழிகளுக்கு என்ன வாயிற்று என நான் கேட்க விரும்பு கிறேன்.

நல்லாட்சி காலத்திலும் நூறு நாள் வேலைத்திட்டம் முன்னெ டுக்கப்பட்டது.

அப்போது பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன. பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மக்களுக்கு உறுதியளித்தது போன்று தகவல் அறியும் உரிமை சட்டமூலத்தை உருவாக்குவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

ஆயினும் தற்போதைய அர சாங்கத்தினால் மக்களுக்கான திட்டங்கள் எதுவும் நடைமுறைப் படுத்தப்படவில்லை - என்றார். (அ)

# உள்ளூராட்சி தேர்தல் திருத்தச் சட்டம் இரு வாரங்களில் பாராளுமன்றத்துக்கு

கொழும்பு, ஜன. 03

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் இன்னும் இரண்டு வாரங்களில் பாராளுமன் றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த சட்டமூலம் வர்த்தமானிக் காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

இரண்டு வருடங்களுக்கு முன் னர் தேர்தலுக்கு முன்மொழியப் பட்ட வேட்பாளர்களில் சிலர் உயிரிழந்துள்ளதுடன் சிலர் நாட்டை விட்டு வெளியேறியும் உள்ளனர்.

இந்நிலையில் 2023 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கோரப்பட்ட வேட்புமனுக்களை மீளப்பெறுவ தற்கு இந்த திருத்தங்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளன.

மேலும் புதிய வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்கும் முக்கிய நோக்கத்துடன் இந்த திருத் தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



கட்சித் தலைவர்களின் இணக் கப்பாட்டின் அடிப்படையில் திருத் தங்களை மேற்கொள்ள அமைச் சரவை அண்மையில் தீர்மானித் தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஊழியர் பற்றாக்குறையால் தொடரும் ரயில் தாமதங்கள்!

கொழும்பு, ஜன. 03

புகையிரத சாரதிகள், கட்டுப்பாட்டாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் உட்பட புகையிரதத்தின் பிரதான பிரிவுகளில் ஏறக்குறைய ஆயிரத்துக்கும் மேற் பட்ட பணியாளர்கள் பற்றாக்குறை நிலவுவதால் ரயில் தாமதங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த பணியாளர்கள் பற்றாக்குறையாலும், ரயில் இயந்திரங்கள் கிடைக்காததாலும் நாளொன்றுக்கு நாற் பதுக்கும் மேற்பட்ட ரயில் பயணங்கள் இரத்து செய்ய வேண்டியுள்ளதாக திணைக்களம் சுட்டிக்காட்டியுள் ளது.

தினமும் 390 ரயில்கள் இயக்கப்படவேண்டியிருந்தா லும், இந்த பற்றாக்குறையால் 346 ரயில்களுக்கு மட் டுமே ரயில் பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது 150 ரயில் ஓட்டுநர்கள், 120 கட்டுப்பாட் டாளர்கள், 600 தொழிநுட்ப வல்லுநர்கள் பற்றாக்குறை காணப்படுவதாக கூறப்படுகிறது.

பணியாளர்கள் பற்றாக்குறையால் இயந்திர பராம ரிப்பு பணி தாமதமாகி வருவதாகவும், பராமரிப்புப் பணிக்காக தற்போது 30-40 இயந்திரங்கள் பராமரிப்புப் பிரிவுகளில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவும் பணியாளர் பற்றாக்குறை குறித்து அரசாங்கத்திற்கு அறியப்படுத்தியுள்ளதாகவும் அது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தி வருவ தாகவும் ரயில்வே திணைக்களத்தின் பேச்சாளர் தெரி வித்தார். (அ)

## உப்பு இறக்குமதிக்கு விலை மனு; இன்று முதல் கோர அரசு தீர்மானம்

கொழும்பு, ஜன. 03

30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்வ தற்கான விலை மனுக்களை இன்று முதல் கோருவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

முதல் கட்டமாக 20,000 மெற்றிக் தொன்களும், இரண்டாம் கட்டத்தின் கீழ் 10,000 மெற்றிக் தொன் களும் உப்பு இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக் கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 20,000 மெற்றிக் தொன் உப்பை இறக்கு மதி செய்வதற்கான விலை மனுக்கள் இன்று கோரப்பட வுள்ளன.

இறக்குமதி செய்யப்படும் உப்பை கைத்தொழில் அமைச்சின் கீழ் விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளன.

இறக்குமதி செய்யப்படும் உப்பு தொழிற் தேவைக ளுக்கு மாத்திரம் பயன்படுத்தப்படும் என்றும் சாதாரண மக்களின் பாவனைக்கு வழங்கப்படாதென்றும் தெரி விக்கப்பட்டுள்ளது. (அ)

# நுகர்வோரினால் நிராகரிக்கப்படும் இறக்குமதியான வெள்ளைப்பச்சை!

கொழும்பு, ஜன. 03

தம்புள்ளை சந்தைக்கு வழங்கப் பட்டுள்ள இறக்குமதி செய்யப்பட்டுள்ள வெள்ளை பச்சை அரிசி, நுகர்வோர் மூலம் நிராகரிக்கப்படு வதால் அவற்றைக் கட்டுப் பாட்டு விலைக்கு விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்ற னர்.

இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைப் பச்சைய ரிசியை வாங்கி வீட் டுக்கு சொண்டு செல்லும் நுகர் வோர் அவற்றை மீண்டும் கடைகளுக்கு வழங்குவதாக விற்பனையா ளர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, வெள்ளைப் பச்சையரிசிக்கு அதிக கேள்வி இல்லாததால் விற்பனையாளர்களால் அதனை விற்பனை செய்ய முடியாத சூழல் எழுந்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைப் பச்சையரிசி கிலோ ஒன்று தம்புள்ளை சந்தைக்கு விநியோகிக்கப் படும்போது 212 ரூபாய் 50 சதம் செலவளிக்கப்படுவ தாக கடை உரிமையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும், அரசாங்கத்தின் அதி விசேட வர்த்தமானி யின் அடிப்படையில், இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைப் பச்சையரிசி கிலோ ஒன்று 210 ரூபாய் என்ற சில்லறை விலைக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது.

எவ்வாறாயினும், அதனைக் கட்டுப்பாட்டு விலையை மீறி 215 ரூபாய்க்கு விற்பனை செய்ய வேண் டிய நிலை உருவாகியுள்ளதாக விற்பனையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

## அசோக ரன்வலவின் கலாநிதி பட்டம் கேள்வியெழுப்ப தயாராகும் எதிரணி

கொழும்பு, ஜன. 03

முன்னாள் சபாநாயகர் அசோக ரன்வலவின் கலாநிதி பட்டம் தொடர்பில் எதிர்வரும் பாராளுமன்ற அமர் வில் கேள்வியெழுப்பவுள்ளதாக எதிர்க்கட்சி உறுப்பி னர்கள் தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

தனது கலாநிதி பட்டம் தொடர்பில் எழுத்து மூலமான சான்றிதழை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப் பதாக அறிக்கை வெளியிட்டு, கடந்த 13ஆம் திகதி அசோக ரன்வல பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

எனினும், தற்போது இரண்டு வாரங்களுக்கு மேலா கியும் அவருடைய அந்த கல்வித் தகைமையை உறுதிப் படுத்தும் எந்தவொரு எழுத்துமூல ஆவணமும் முன் வைக்கப்படவில்லை.

ஜப்பானின் வசேதா பல்கலைக்கழகத்திலிருந்து 'கலாநிதி' பட்டத்தை பெற்றுக்கொண்டதாகவும் அவர் கூறியிருந்தார்.

எனினும், மொறட்டுவை பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பொறியியல் பட்டப்படிப்புச் சான்றி தழையும் இதுவரை அவர் சமர்ப்பிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

## நெல்லுக்கு உத்தரவாத விலை

கொழும்பு, ஜன. 03

எதிர்வரும் நாட்களில் நெல்லுக்கான புதிய உத்தர வாத விலை அறிவிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் தெரி வித்துள்ளது.

விவசாயம் மற்றும் கால்நடை வளத்துறை பிரதிய மைச்சர் நாமல் கருணாரத்ன இந்த அறிவிப்பை வெளி யிட்டுள்ளார்.

உர நிவாரணம் வழங்கப்படாத விவசாயிகளுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப் படும் என அவர் தெரிவித்தார்.

இந்த வாரத்துக்குள் அதனைப் பெற்று கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த பெரும்போகம் ஆரம்பமாவதற்கு முன்னர் உர மானியத்தை வழங்க நட வடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.